பக்கங்கள்: 12

இனி துரகசியம் அல்ல!

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 31 செவ்வாய்க்கிழமை 16.07.2019 கதிர் 253

பெருங்குடி மக்கள் பற்றிய இரண்டு செய்திகள் இன்று இப்பத்தியில்.

மதுபான விற்பனைக்கான லைசென்ஸ்கள் வழங்கியமை தொடர்பான தகவல் முதலாவது.

நாட்டில் 2017 இல் ஆக பத்து லைசென்ஸ்கள் பக்கம் 02



## கன்னியா பிள்ளையார் ஆலயம் அழிப்பு கலாசார ரீதியான இனப்படுகொலையே!

### சாடுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தை உடைத்து அந்த இடத்தில் விகாரை கட்டுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான இனப்படு பக்கம் 11

# அதிகாரப் பகிர்வின் மூலம் இரு வருடங்களுக்குள் தீர்வு!



### யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்று உறுதியாக கூறினார் பிரதமர் ரணில்

*(எஸ்.நிதர்ஷன்)*

யாழ்ப்பாணம், ஜூலை 16

அதிகாரப் பகிர்வின் மூலம் இரண்டு வருடத்துக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்திக் கொடுப்பேன்.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

நீண்டகாலமாக உள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு - அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு - எங்களது கட்சியும் நானும் தயாராக இருக்கின்றோம். அதேபோல் பெரும் பாலான சிங்களவர்களும் அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொண்டு இணங்கிப் போகும் நிலை ஏற்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். பக்கம் 11

## இன்னும் 5 மாதங்களில் புதிய அரசு அமையும்

### நுவரெலியாவில் கூறினார் மைத்திரி



கொழும்பு, ஜூலை 16

ஊழலை ஒழிக்கவே இந்த அரசு பதவிக்கு வந்தது. ஆனால் எதனையும் செய்ய முடியாமல் போயுள்ளது. அதனால் மக்கள் திருடர் பட்டங்களைச் சுமத்துகின்றனர். இன்னும் 5 மாதங்களில் புதிய அரசு ஒன்றை அமைக்க வாய்ப்பு கிடைக்கும். அதில் ஊழலற்ற பக்கம் 11

## மாகாணத் தேர்தல் ஏற்பாடுகளை செய்ய மைத்திரியிடம் கோரிக்கை

### தேர்தல் ஆணையாளர் விடுத்தார்



கொழும்பு, ஜூலை 16

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய அடிப்படை ஏற்பாடுகளைச் செய்யுமாறு தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கோரிக்கை விடுத்திருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் பக்கம் 02


## முஸ்லிம் எம்.பிக்கள் அமைச்சுப் பதவி ஏற்பதில் தொடர்கிறது இழுபறி நிலை!

கொழும்பு, ஜூலை 16

பதவிகளை இராஜினாமா செய்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது பதவிகளை மீண்டும் பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்பில் இருந்து அழைப்புக்கள் விடுக்கப்பட்டு நேற்று மாலை அமைச்சுப் பொறுப்புக்களை அவர்கள் ஏற்பதாக இருந்தது.

ஆனாலும் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்த அனைவரும் மீண்டும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்பதென்று முன்னதாகத் தீர் பக்கம் 02

## முகமாலையில் வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் கையிழப்பு



கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி - முகமாலைப் பகுதியில் பழைய இரும்புத் துண்டுகளைச் சேகரித்தவர், வெடிபொருளில் சிக்கிக் கையை இழந்தார். பக்கம் 11

## 5 ஜி கம்பங்களை மின்விளக்குகள் என மக்களை முட்டாளாக்கும் மாநகரசபை

### ஐங்கரநேசன் பரபரப்புக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 16

அதி உயர்வேகத் தொலைத்தொடர்புக் கம்பங்களைச் சாதாரண மின்விளக்குக் கம்பங்களாகக் காட்டி யாழ்ப்பாணம் மாநகரசபை மக்களை முட்டாள்களாக்கியுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் பக்கம் 02

## கொக்குத்தொடுவாயில் தனியார் காணிகள் அபகரித்துள்ளது வனைத் திணைக்களம்!

### உடன் விடுவிக்குமாறு உரிமையாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில், கடந்த 1981ஆம் ஆண்டு காலப் பகுதியில் உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கெனத் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை வன வளத் திணைக்களம் அபகரித்துள்ளது.

தம் காணி விடுவிப்பைக் கோரியிருந்த நிலையில், வனவளத் திணைக்களத்தினர் தமது காணிகளை விடுவிப்பதாக தெரிவித்திருந்தபோதும் இதுவரை விடுவிக்கவில்லை எனக் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது பக்கம் 02

## ஒக்ரோபர் 8 இல் வருகின்றது பெரமுனவின் விஞ்ஞாபனம்!

கொழும்பு, ஜூலை 16

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்படும் என அந்தக் கட்சியின் தலைவர் பக்கம் 11

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# வவுனியாச் சிறையில் கைதி தப்பியோட்டம்

வவுனியா, ஜுலை 16

வவுனியாவில் சிறைச்சாலையில் இருந்து சிறைக்கைதி ஒருவர் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணியளவில் தப்பியோடியமையினால் பரபரப்பு ஏற்பட்டது.

ஹெரோய்ன் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொழும்பைச் சேர்ந்த வீரசிங்கம் முதியன்சலாகே பியந்தஅப்புகாமி என்றநபரேதப்பிச்சென்றுள்ளார்.

இவர் உள்ளிட்ட சிறைக்கைதிகள் பலர் சிறைச்சாலையைச் சுற்றிய பகுதிகளைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். வேலை செய்த இடத்திலிருந்து கைதி பல மணி நேரமாகத் திரும்பாததால் சிறைக்காவலர் சென்று பார்த்த போதுகைதிதப்பிச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

தப்பிச் சென்ற இந்தக் கைதியைத் தேடி வவுனியா சிறைக் காவலர்கள் வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தப்பிச் சென்ற கைதியைத் தேடிக் கண்டுபிடித்துச் சிறைச்சாலைக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதன் பின்னணியில் யாரும் செயற்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# வவுனியா விபத்தில் நான்கு பேர் படுகாயம்

வவுனியா – பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதுடன் வீதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த முதியவரையும் மோதி தள்ளியுள்ளது.

இவ்விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிளுக்குச் சேதமடைந்துள்ளமையுடன் இரு மோட்டார் சைக்கிளிலும் பயணித்துக் கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சிறுமிகளைத் தாக்கிய யானை

மட்டக்களப்பு, ஜுலை 16

மட்டக்களப்பு – தும்பங்கேணி கிராமத்தில் நேற்றுக் காட்டு யானை தாக்கிச் சிறுமிகள் காயமடைந்தனர். தோட்டங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைக்குச் செல்வதற்காக குளிப்பதற்குச் சென்ற சிறுமிகளைக் காட்டு யானை ஒன்று தாக்கியுள்ளது. அத்துடன் கிராமத்துக்குள் புகுந்து தோட்டங்களையும் சேதப்படுத்தியுள்ளது. தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு மற்றும் யானை வெடி கொழுத்தியும் யானையை மக்கள் வெளியேற்றியுள்ளனர். (ஐ)

## கொக்குதொடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளைஉடனடியாகவிடுவிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

அவர்கள்மேலும்தெரிவிக்கையில் –

எமக்கு கடந்த 1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் குஞ்சுக்குளம், கோட்டைக்கேணி, குளத்துச் சோளகம், காயாவடிக் குளம் போன்றபகுதிகளில்உபஉணவுப் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட காணிகளைத் தற்போது வனவளத் திணைக்களத்தினர் அபகரித்துள்ளனர்.

இதேவேளை காயாவடிக் குளம்பகுதியில்1984ஆம்ஆண்டு இடப்பெயர்விற்கு முன்னர், 36இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியிருந்தன.

இவ்வாறு கடந்த 1984ஆம் ஆண்டு எமது பகுதிகளிலிருந்து வலுக்கட்டாயமாக இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட நாம், கடந்த 2011ஆம் ஆண்டு காலப் பகுதியில் எமது பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்டோம்.

ஏறக்குறைய 30ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நீண்ட கால இடப்பெயர்வை நாம் சந்தித்திருந்ததால் எமது பயிர்ச்செய்கை நிலங்கள் அனைத்தும் பெருங் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

இந்தநிலையில்பாரியகாடாகக் காணப்படும்எமது பயிர்ச்செய்கை நிலங்களைத் தமக்குரியதெனத் தெரிவித்து, வனவளத் திணைக்களத்தினர் கடந்த 2016ஆம் ஆண்டு எல்லைக் கற்களை நாட்டினர்.

வன வளத் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். அதையும் மீறி அவர்கள் தமது எல்லைக் கற்களை நாட்டினர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட எமது காணிகளை விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத்தினரிடம் கோரியிருந்த நிலையில், அளவீடு செய்து 95 ஏக்கர் வரையன காணிகளை விடுவிப்பதாக தெரிவித்திருந்தனர். எனினும் இதுவரை அவர்கள் எமது காணிகளை விடுவிக்கவில்லை.

குறிப்பாக இந்தப் பகுதிகளில் எமக்கு 200 ஏக்கருக்கு மேற்பட்ட உபஉணவுப் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட காணிகள் காணப்பட்டன.

இந்தப்பகுதியில்பெரும்பான்மை இன மக்களுக்கு ஒருவருக்கு 25 ஏக்கர் வீதம் பழமரச் செய்கைக்கெனக் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 105 ஏக்கருக்கும் மேற்பட்ட எமது காணிகளும் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாம் காணி விடுவிப்பைக் கோரியிருந்த நிலையில், அளவீடுகளைச் செய்து 95ஏக்கர் வரையான காணிகளை விடுவிப்பதாக வனவளத் திணைக் களத்தினர் தெரிவித்திருந்தபோதும் இதுவரை விடுவிக்கவில்லை.

இவ்வாறு எமது காணிவிடுவிப்பில் இழுத்தடிப்புச் செய்து மீதமாகவுள்ள காணிகளையும் பெரும்பான்மை இன மக்களுக்கு வழங்க எத்தனிக்கின்றனரா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் எமது காணிகளை உடனடியாக விடுவிக்கஉரியநடவடிக்கைகளை எடுக்கவேண்டும் – என்றனர். (ஐ)

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைபத்திரிகைஆசிரியர் பேரவையின் உறுப்பினர்களை நேற்று தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 33 ஆவது விதந்துரைக்கு அமைவாகத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழலை உருவாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதாகக் குறிப்பிட்ட மஹிந்த தேசப்பிரிய, அதனைச் செய்யுமாறு அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு 2017 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து தேர்தல் ஆணைக்குழு அரசிடம் கோரிக்கை விடுத்தது என்றும் அவர் கூறினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் புதிதாக வழங்கப்பட்டன. ஆனால் 2018இல் 74 புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரே ஆண்டில் சுமார் 65 வீத அதிகரிப்பு.

2006 இற்குப் பின்னர் இப்படி அதிக எண்ணிக்கையில் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது இது இரண்டாவது முறை. இதற்கு முன்னர் 2014 இல் 83 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2015இல் - 52; பின்னர் 2016 இல் – 38 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டன.

ஆனாலும், 2014 இலும், 2018 இலும் இப்படி அதிக எண்ணிக்கையில் அவை விநியோகிக்கப்பட்டதன்பின்னால்புதையுண்டு கிடக்கக் கூடிய சூத்திரம் என்ன?

2014 இறுதியில்தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அது போல 2015 தேர்தல்களுக்குப் பின்னர் 2018 முடியும் கையோடுதான் நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன்னர் அரசியல்வாதிகளுக்கு கைகள் அரிக்கும். பெருங்குடி மக்களுக்கு தாகம் எடுக்கும். இரண்டுக்கும் ஒரே கல்லில் தீர்வு. அதுதான் அதிக எண்ணிக்கை லைசென்ஸ் விநியோகம் போலும்.

அடுத்தது - குடித்து விட்டு வாகனம்செலுத்துவதற்குஎதிராகக் கடும் நடவடிக்கைக்கு அரசு தயாராவதாகத் தெரிகின்றது.

மது போதையில் வாகனம் செலுத்துவோரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை வாழ்க்கை முழுவதுக்குமே பயன்படுத்த முடியாமல் தடை செய்யும் விதத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதாவது, மது போதையில் வாகனத்தைச் செலுத்தும் போது பொலிஸாரிடம் சிக்கினால், அல்லது விபத்தில் சிக்கினால், அதற்குப் பின்னர் ஓடும் வாகனத்தின் சாரதி ஆசனத்தில் அமரும் வாய்ப்பே அந்த நபருக்கு இல்லை என்ற சட்ட ஏற்பாடு.

போதைப் பிரியர்களை போதையிலிருந்து தெளிய வைக்கும் அதிர்ச்சிச் சட்டமாக இது இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆனாலும், போதை மயக்கம், அந்நிலையில் சாரதி ஆசனத்தில் அமரக் கூடாது என்ற உண்மையை–நியாயத்தை–மூளைக்கு உறைக்க அனுமதிக்குமா என்பது தான் கேள்வி.

\- மின்னல் -

## 5 ஜி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாநகரசபையின் எல்லைப் பரப்பினுள் புதிதாக அமைக்கப்பட்டுவரும் தொலைத்தொடர்புக் கம்பங்களை 5ஜி அலைக்கற்றைக் கம்பங்களாகக் கருதிப் பொதுமக்கள் பயங்கொள்வதையும், எதிர்ப்பு ஆர்பாட்டங்களில் ஈடுபடுவதையும் எவரும் பிழை என்று கூறமுடியாது. தவறு யாழ் மாநகரசபையிலும், இதனை அமைப்பது தொடர்பாக எடொக்ரோ(edocto) என்ற நிறுவனத்துடன் அது செய்து கொண்ட ஒப்பந்தத்திலுமே உள்ளது.

எடொக்ரோ தொலைத்தொடர்பு உட்கட்டுமானங்களை நிர்மாணித்துக் கொடுக்கின்ற மலேசியாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற ஒரு தனியார் நிறுவனம்.

இரண்டு தரப்புகளும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் திறன் விளக்குக் கம்பங்களை (Smart Lamp Pole) அமைப்பதற்கான ஒப்பந்தம் என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் முதலில் விளக்குகள் பொருத்துவது பற்றியும் அடுத்து விளம்பரச்சாதனங்கள் பொருத்துவதுபற்றியும்பின்னர்கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்துவது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசியில், ஏதோ முக்கியத்து–வம் இல்லாத ஒன்றைக் குறிப்பிடுவதுபோல சிறிய செலூலர் அன்ரெனாக்கள் பொருத்தப்படுவது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையில், இதுவே பிரதானமானது. விளக்குகள், விளம்பரங்கள், கமெராக்கள் எல்லாம் இதனுடன் கொடுக்கப்படுகின்ற உதிரி இணைப்புகள். மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி அவர்களை ஏமாற்றும் நோக்கில் இவற்றை முன்னிலைப்படுத்தியிருப்பது பாரதூரமான தவறு ஆகும்.

ஒப்பந்தத்தில் சிறிய அலை ஈர்ப்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளேதே தவிர அது 4ஜி அல்லது 5ஜி தொடர்பாடலுக்கானதா என்பது பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. ஆனால், 5ஜி அலைக்கற்றைக்கான அன்ரெனாக்கள் மிகவும் சிறியவை என்று புரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு யாழ்ப்பாணச் சமூகம் அறிவிலிகள் அல்லர். டயலொக், மொபிரெல் நிறவனங்கள் 5ஜி அலைக்கற்றைகளை அண்மையில் பரீட்சார்த்தமாகப் பரிவர்த்தனை செய்துவிட்டு தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணையத்திடம் இருந்து வணிகரீதியிலான அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. மொபிரெல் 5ஜி வலையமைப்புக்கென 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தஆண்டில் செலவிட விருப்பதாக அறிவித்திருக்கிறது. இந்நிலையில் இந்தக்கம்பங்கள் 5ஜி க்கு உரியவை என்று பொது மக்கள் கருதுவது நியாயமானதே.

தொலைத்தொடர்புத் தொழில்நுட்பத்தில் 5ஜி எனப்படுவது 5 ஆவது தலைமுறை என்பதைக் குறிக்கிறது. இது தற்போதுள்ள நான்காவது தலைமுறையான 4ஜி ஐ விட அதிஉயர் வேகத்தில், மிககுறுகிய நேரத்தில், அதிக கொள்ளளவுடைய தகவல்களைப் பரிமாற்றக் கூடியது. ஆனால், இதன் அலைக்கற்றைகள் குறுகிய அலைநீளம் கொண்டவை. இதனால், 5ஜி வலையமைப்பில் மிக அதிக எண்ணிக்கையான அன்ரனாக்களை குறுகிய இடைவெளிகளில் நிர்மாணிக்க வேண்டும். இதனாலேயே மின்விளக்குக் கம்பங்களின் இடத்தினை அன்ரெனாக் கம்பங்கள் பிடிக்க ஆரம்பித்துள்ளன.

5ஜி வலையமைப்பில் அன்ரனாக்கள் அதிகம் என்பதால் நாம் என்றும் எப்போதும் மின்காந்தக் கதிர்வீச்சின் தாக்குதலுக்குஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இது மனிதர்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் ஆபத்தானது. இதனால், இதனை முழுமையாக அனுமதிப்பதில் மேற்குலக நாடுகள் தயக்கம் காட்டி வருகின்றன. இதன் பாதிப்புகளை முழுமையாக ஆய்வு செய்கின்ற வரைக்கும் தொலைத்தொடர்பாடலில் 5ஜிஐப்பயன்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறு 36 நாடுகளைச் சேர்ந்த 180 விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்திடம்கூட்டாகக்கோரிக்கை விடுத்துள்ளனர். அமெரிக்கா 5ஜி வலையமைப்பின் ஊடாகச் சீனா உளவு பார்க்கலாம் என்ற அச்சம் காரணமாகச் சீனத் தயாரிப்பு 5ஜி செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்துவதற்கு அங்கு தடை விதித்திருக்கிறது.

தொழில்நுட்ப நாடான சிங்கப்பூர் இன்றுவரை 5ஜி ஐ ஆரம்பிக்கவில்லை. இந்நிலையில், அடிப்படைச் சேவைகளையே மக்களுக்குப் பூரணமாக வழங்க முடியாத நிலையில் உள்ள யாழ் மாநகரசபையும், சில பிரதேச சபைகளும் 5ஜி க்குஅவசரம் அவசரமாகப் பச்சைக் கம்பளங்களை விரிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத, காலத்தால் முந்திய ஒரு செயல். அத்தோடு, யாழ் மாநகரசபை இது தொடர்பாக எடொக்ரோவுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும் முறையற்றது. மாநகரசபைகளுக்குரிய விதிகளின் படி ஒரு வருடத்துக்கு மேலான காலத்துக்கு ஒரு திட்டத்துக்கு அனுமதி வழங்கும் போது ஆணையாளரும், மாநகர முதல்வரும் கண்டிப்பாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். ஆனால், பத்து வருடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ள இந்த ஒப்பந்தத்தில் மாநகர முதல்வர் மட்டுமே கையெழுத்திட்டுள்ளார். மாநகர ஆணையாளர் என்ன காரணத்துக்காகவோ கையெழுத்து இடுவதைத் தவிர்த்துக் கொண்டார்.

இவற்றின் அடிப்படையில், திறன் விளக்குக் கம்பங்கள் என்ற போர்வையில் அதிஉயர் வேகத் தொடர்பாடற்கம்பங்களை அமைக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு யாழ்மாநகரசபையும், பிரதேசசபைகளும் ஆவன செய்ய வேண்டும்–என்றார். (ஐ)


## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானிக்கப்பட்டிருந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்முனை எம்.பியான ஹாரீஸ் தனது இராஜாங்க அமைச்சுப் பொறுப்பை மீண்டும் ஏற்கப் போவதில்லையென்று கூறியுள்ள நிலையில் நேற்றைய அமைச்சுப் பொறுப்பேற்கும் நிகழ்வு தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

அமைச்சுப் பொறுப்பேற்கும் நிகழ்வுகள் நடக்குமா என்று ரிஷாத் பதியுதீன் எம்.பியிடம் கேட்ட போது, அனைத்து முஸ்லிம் எம்.பிக்களும் இது விடயத்தில் கூட்டுத் தீர்மானம் எடுத்த பின்னர் அது நடக்குமென தெரிவித்தார். (ஐ)

# ஆஸியில் இருந்து இலங்கைக்கு குறைந்த கட்டண விமான சேவை



ஜெட் ஸ்ரார் எயர்வேய்ஸ் திட்டம்

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரைத் தலைமையிடமாக கொண்டியங்கும், குறைந்த கட்டண விமான சேவை நிறுவனமான ஜெட் ஸ்ரார் எயர்வேய்ஸ் இலங்கைக்கு விரைவில் விமானங்களை இயக்கவுள்ளது.

இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹாலி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

'மெல்போர்ணில் இருந்து கொழும்புக்கு சிறிலங்கன் விமான சேவையின் நேரடி விமான சேவை மிகவும் பிரபலமாக உள்ளது. சிட்னியில் இருந்தும் சிறிலங்கன் நிறுவனம் விரைவில் விமான சேவையை ஆரம்பிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஜூன் மாதம் ஆஸ்திரேலியாவில் இருந்து 4000 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விமானம் மூலமாகவே வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெட் ஸ்ரார் எயர்வேய்ஸ், குவான்டாஸ் விமான நிறுவனத்தின் மானியத்தில் இயங்கும் ஒரு துணை நிறுவனமாகும்.

குறைந்த கட்டண விமான சேவையான வேர்ஜின் புளூவின் போட்டியைச் சமாளிக்கவே இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. (ஐ)

## ரஞ்சன் மன்னிப்புக் கோர 24 மணி நேரம் அவகாசம்

கொழும்பு, ஜூலை 16

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பௌத்த தேரர்கள் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கு மகா சங்கத்தினரிடம் மன்னிப்புக் கோருவதற்கு 24 மணி நேர கால அவகாசம் வழங்குவதாக சிங்களே அமைப்பின் பொதுச் செயலாளர் மடில்லே பஞ்ஞாலோக தேரர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கூக்குரல் இட்டுத் திரியும் 90 இற்கும் அதிகமான பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டவர்கள் எனவும் அதனால் மன அழுத்தங்களுக்கு உட்பட்டதனாலேயே இவ்வாறு தேரர்கள் குரோதத்துடன் காணப்படுகின்றனர் எனவும் சமூக வலைத்தளத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் கூறினார். (ஐ)

# மைத்திரியின் நிகழ்ச்சி நிரலில் நடக்கின்றார் சஜித் பிரேமதாஸ!

### அவரை எப்படி நம்புவது என்று கேள்வி எழுப்புகிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுகின்ற அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க ஆசைப்படுகின்றார்? இவரை எப்படி நாம் நம்புவது?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரான சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்தாலும், இவர் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே செயற்படுகின்றார். இவர் ஜனாதிபதியின் தேவைகளையே நிறைவேற்றி வருகின்றார். ஜனாதிபதி கூறும் விடயங்களைத்தான் இவர் ஏற்றுக்கொள்கின்றார். இப்படிப்பட்டவர்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க ஆசைப்படுகின்றார். இவரை எப்படி நாம் நம்புவது?

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட ஆசைப்படுகின்றார். தனக்கு வாக்குகள் தேவை என்பதற்காகச் சிறைச்சாலையில் உள்ள மனிதர்களைத் தூக்கில் போட அவர் முயற்சிக்கின்றார். மரணதண்டனைக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. அதே நிலைப்பாட்டில்தான் நாங்களும் உள்ளோம் – என்றார். (ஐ)



## ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டுமில்லை

### கூறுகிறார் பிரதமர் ரணில்



திருமலை, ஜூலை 16

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் சபாநாயகரினால் தமக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் 300 குற்றச்சாட்டுகள் இருந்தனஎனவும் இந்தக் குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவை எந்தவித அடிப்படையும் அற்ற குற்றச்சாட்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதற்கு அமைவாக ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எந்த வித குற்றச்சாட்டும் இல்லை எனச் சபாநாயகர் அறிவித்திருக்கிறார் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கிண்ணியா மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் சில பிரிவுகளைச் சிலர் நிராகரிப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு செய்வது ஐ.எஸ்.ஐ.எஸ பயங்கரவாதத்துக்கு உதவி புரிவதாக அமையும். ரிஷாத் மீது எந்தக் குற்றச்சாட்டும் உறுதி செய்யப்படவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் இராணுவத் தளபதி சாட்சியமளித்தபோது ரிஷாத் பதியுதீன் தமக்கு எந்தவித அழுத்தத்தையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தார்.

புலனாய்வுப் பிரிவின் அறிக்கை சட்டமா அதிபர் மற்றும் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் – என்றார். (ஐ)

## இலங்கை – பிரிட்டன் படைகள் கூட்டுப் பயிற்சிக்கு ஆயத்தம்!

கொழும்பு, ஜூலை 16

இலங்கைப் படைகளுடன் இணைந்து பிரிட்டன் இராணுவம் இந்த ஆண்டு கூட்டுப் பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது. இது தொடர்பாக, பிரிட்டன் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று இலங்கை இராணுவத்துடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கேணல் டேவிட் அஸ்மன் மற்றும் நான்கு பிரிட்டன் இராணுவ அதிகாரிகள் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றுள்ளனர்.

தியத்தலாவயில் உள்ள இலங்கை இராணுவத்தின் மத்திய படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

மத்திய படைகளின் கட்டளைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் லக்சிறி வாதுகேயுடன் இவர்கள், பிரதானமாக இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கையின் முப்படைகளுடன் பிரிட்டன் இராணுவம் நடத்தவுள்ள 'மனிதாபிமான உதவி மற்றும் இடர் மீட்பு' ஒத்திகை குறித்து கலந்துரையாடியுள்ளனர். (ஐ)

## 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலத்திரனியல் தேர்தல் முறை



2020ஆம் ஆண்டின் பின்னர் நடைபெறும் தேர்தல்களுக்கு இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போது இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில் வைத்து கட்சித் தலைவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கொள்கை அடிப்படையில் உடன்பட்டதாகவும் இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வரும் தேர்தல்களில் இலத்திரனியல் வாக்கெடுப்பை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹிருணிக்கா எம்.பிக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



இளைஞரொருவர் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்தி முன்னிலையில், நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

2016ஆம் ஆண்டு, தெமட்டகொடையில் வர்த்தக நிலையமொன்றில் கடமையாற்றிய இளைஞரொருவர் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா உள்ளிட்ட 9 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளான 8 பேரும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டமையால், மேல் நீதிமன்றம் ஊடாக அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு தொடர்ச்சியாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அதீத ஆதரவு ஆபத்தானது!

*“தமிழ் மக்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தி கொடூரமான முறையில் கொன்றொழித்தவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர நாம் இடமளிப்பதா? மீண்டும் ஒரு சர்வாதிகார நாசகார ஆட்சி ஏற்படுவதற்கு நாம் ஒத்துழைப்பதா? இதனைக் கருத்திற்கொண்டுதான் தற்போதைய அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக நாம் வாக்களித்தோம்; அந்தப் பிரேரணையைத் தோற்கடித்தோம்.”* – இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

இதனையே வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் வழி மொழிந்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

*“இந்த நாட்டில் மீண்டும் ஒரு காட்டாட்சி ஏற்படுகின்றமையைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. அதனால்தான் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்கும் விதத்தில் அதற்கு எதிராக வாக்க ளித்தனர்.”* – என்றுகுறிப்பிட்டுள்ள பிரதமர் ரணில், *“இந்த அரசை எவராலும் கவிழ்க்க முடியாது. மீண்டும் இந்த நாட்டை நாசம் செய்ய எவருக்கும் நாம் இடமளிக்க மாட்டோம்”* என்று உறுதிபடவும் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இது, தமது அரசுக்கு தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவு என்றும் தொடரும்னெம் நம்பிக்கையில் பிறந்த ஒரு கூற்றாகவே கருதவேண்டும். பிரதமரின் இந்த நம்பிக்கை தமிழரின் ஆதரவு தொடர்பில் அவருக்கு இருக்கும் உறுதி, தவறான எண்ணப்பாட்டை அவருக்குத் தந்து விடக் கூடாது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோன்று, முன்னர் நடந்த சில விடயங்களின் அனுபவங்கள் இத்தகைய திசையில் நம்மை எண்ண வைக்கச் செய் கின்றன.

1995 இல் சந்திரிகா குமாரதுங்க தலைமையில் சுதந்திரக் கட்சியிடம் தான் பறிகொடுத்த அரசை 2001 டிசெம்பரில் நடந்த பொதுத் தேர்தல் மூலம் ரணில் கைப்பற்றினார்.

அன்றைய நிலையில் ரணிலின் அரசு மீண்டும் ஆட்சிக் கட்டுக்கு வருவதற்கு தோன்றாய்த் துணையாய் இருந்தவர்கள் தமிழர்களின் ஏகோபித்த போராட்ட சத்தியாய்த் திகழ்ந்த விடுதலைப் புலிகள்தாம்.

2001 டிசெம்பர் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் 2001 நவம்பர் மாவீரர் தினத்தை ஒட்டி தலைவர் பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையை செவிமடுத்தால், ரணிலின் அரசை ஆட்சிக் கட்டுக்குக் கொண்டு வருவதற்குப் புலிகள் எவ்வளவு தூரம் கரிசனையாகச் செயற்பட்டார்கள் என்பது துலாம்பரமாகும்.

தமது காய் நகர்த்தலினால், ஆட்சிக்கு வந்த ரணிலின் அரசுடன் ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்களை சர்வதேச அரங்க மேசைகளிலே புலிகள் நடத்தினார்கள். ரணிலின் அரசுடன் ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டு இணக்கமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இயன்றளவு முயற்சித்தார்கள். இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவுவதற்கான ஆலோசனைத் திட்டம் ஒன்றைக் கூடப் புலிகள் பிரேரித்தார்கள்.

ரணிலின் அரசுடன் இணக்கமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு புலிகள் முனைப்புடன் ஈடுபட்ட சமயத்தில்தான். ரணிலை அரசு கலைத்து வீட்டுக்கு அனுப்பி அந்த சமாதான முயற்சிகளுக்கு நிரந்தர ஆப்பு வைத்தார் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அதற்குப் பின்னர் 2004 இல் நடந்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பியுடன் கூட்டமைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்ததும், சந்திரிகா தலைமையிலான அரசு தொடர்ந்ததும் அதன் பின்னர் நடந்தேறிய சம்பவங்கள்.

அந்தப் பொதுத் தேர்தல் நடந்து ஓராண்டில் – அதாவது 2005 நவம்பரில் – மீண்டும் ஜனாதிபதித் தேர்தல். அச்சமயம் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை எதிர் கொண்டார் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க.

அதற்கு சுமார் ஒன்றரை ஆண்டுகள் வரை தம்முடன் சமரசப் பேச்சு நடத்தி, சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட அரசின் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு புறம் – அந்த சமாதான முயற்சிகளை குழப்பியடிப்பதற்காகவே அப்போதிருந்த ரணிலின் அரசைக் கலைத்தமை மட்டுமன்றித் தமிழர் தேசம் மீது பெரும் கொடூர யுத்தத்தைத் தொடுத்துவிட்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ –

இந்த இருவரில் அன்று தமிழர்கள் இயல்பாகவே ஆதரித்திருக்க வேண்டியவர் ரணில் விக்கிரமசிங்கதான்.

ஆனால், புலிகள் ரணிலை ஆதரிக்கவில்லை. தங்களது அரசியல் நிலைப்பாடு மூலம் மஹிந்த ஜனாதிபதியாக அவர்கள் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இது ஏன்?

தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கமில்லை என்ற நினைப்பில் – மிதப்பில் – அப்போது ரணில் சில காரியங்களைச் செய்தமையினால்தான் புலிகள் அன்று அப்படி ஒரு முடிவை எடுத்தார்கள்.

இப்போதும் அது போன்ற ஓர் அரசியல் சூழ்நிலைக் கருக்கட்டி வருகின்றது. தமக்கு வாக்களிப்பதைத் தவிர தமிழருக்கு – தமிழர் பிரதிநிதிகளுக்கு – வேறு வழியில்லை – மார்க்கமில்லை – என்ற எண்ணம் பிரதமர் ரணிலுக்கு வருமாயின் அது பேராபத்தாகும்.

ரணிலுக்கு ஆதரவாக அளவுக்கு மீறி கருத்து வெளியிடும் தமிழர்கள் இது குறித்துச் சிந்திப்பது நல்லது.

# போதைப்பொருள்கள் கடத்தல் தொடர்பில் இலங்கை – இந்தியா தகவல் பரிமாற்றம்

கொழும்பு, ஜூலை 16

இந்தியப் பெருங்கடலில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை இந்தியாவும் இலங்கையும் பரிமாறிக் கொள்வதாகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில்,

இலங்கையை நோக்கி இரண்டு படகுகள், போதைப்பொருள்களுடன் சென்று கொண்டிருப்பதைக் கண்டறிந்த இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, இலங்கைக் கடற்படைக்குத் தகவல் வழங்கி இருந்தது.

அதன் பின்னர் அந்தப் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் போதைப்பொருள்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து கொண்டு வரப்படுகின்றன.

தலிபான் தீவிரவாதிகள் தமது தீவிரவாதச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிதியைப் போதைப்பொருள் வணிகம் மூலம் பெறுகின்றனர்.




ஆபிரிக்கக் கரையோரங்கள் போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்வதற்காகப் பெரும்பாலும் இந்தப் போதைப்பொருள்கள் இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன – என்றார்.

# புலனாய்வு அதிகாரிகளை படங்கள் எடுக்கவும் தடை

கொழும்பு, ஜூலை 16

எதிர்காலத்தில் புலனாய்வு அதிகாரிகளிடம் காணொலிப் பதிவு கருவி மூலம், சாட்சியங்களைப் பதிவு செய்ய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு முடிவு செய்துள்ளது.

அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜெயவர்த்தன எதிர்வரும் 24ஆம் திகதி, தெரிவுக்குழு முன்பாக முன்னிலையாகும் போது, அவரிடம் காணொலிப் பதிவுக் கருவி மூலமே சாட்சியம் பெறப்படவுள்ளது.

அத்துடன் புலனாய்வு அதிகாரிகளிடம் சாட்சியங்களைப் பதிவு செய்யும் போது, ஊடகங்கள் அனுமதிக்கப்படமாட்டா. அத்துடன், புலனாய்வு அதிகாரிகளை ஒளிப்படம் எடுக்கவும் அனுமதி அளிக்கப்படாது என்றும் தெரிவுக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அதிகாரிகளிடம் பகிரங்க வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்வது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று குற்றச்சாட்டுகள் கூறப்பட்ட நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜெயவர்த்தனவின் ஒளிப்படம் இதுவரை ஊடகங்களில் வெளியாகாத நிலையில், அவரைத் தொடர்ந்தும், இரகசியமாக வைத்திருக்கும் வகையில். சாட்சியமளிக்கும்போது, அவரைப் படம் பிடிப்பதற்குத் தடை விதிக்கவும் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (ஐ)



வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் வடமாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. (ஐ)

# ’உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்’ நூல் வெளியீட்டு விழா நாளை யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 16

தமிழர் தேசம் கடந்து வந்த பாதையை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டிய சூழலில் யாழ்.ஊடக அமையத்தால் ’உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம்’ எனும் நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அடக்குமுறைகளால் நின்று போயிருந்த நமது ஈழநாடு பத்திரிகையில் அதன் அப்போதைய ஆசிரியரான கலாநிதி சி.ரகுராமினால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்களின் தொகுப்பே நூலாக வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கருத்தரங்க மண்டபத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் நிக்சன் தலைமையில் நூல் அறிமுக நிகழ்வு நடைபெறவுள்ளது.

நூல் மீதான பார்வையை அரசறிவியல்துறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் மற்றும் ஊடக அமையத்தலைவர் ஈ.சபேஸ்வரன் ஆகியோர் முன்வைக்கவுள்ளனர்.

ஏற்கனவே மறைந்த ஊடகவியலாளன் டயஸின் கேலிச் சித்திரங்களை ஊடக அமையம் தொகுத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

17.07.2019
புதன்கிழமை
ஆடிப்பிறப்பு
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ 11.42 வரை
திதி : பிரதமை பி.இ 4.54 வரை
இராகுகாலம் : 12.00 – 1.30
சுப நேரம் : 4.30 – 6.00

# இன்னமும் 45 நாள்களே மைத்திரிக்கு அவகாசம்!

## ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு

**கொழும்பு, ஜூலை 16**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுவதற்கு, இன்னமும் ஒன்றரை மாத கால அவகாசமே உள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது. அதற்குப் பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே இருப்பதாகவும், செப்ரெம்பர் மாதப் பிற்பகுதியில் ஆணைக்குழு அந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிடத் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் ஜனவரி 9ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்கும், டிசெம்பர் 9ஆம் திகதிக்கும் இடையில் – ஒரு சனிக்கிழமை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகி வருகின்றது.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கோரும் வர்த்தமானி அறிவித்தலைத் தேர்தல்கள் ஆணைக்குழுவே வெளியிடும்.

பதவியில் உள்ள ஜனாதிபதியின், பதவிக்காலம் நிறைவடையும் நிலையில், தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை ஆணைக்குழுத் தலைவரே வெளியிடுவார்.

பதவியில் உள்ள ஜனாதிபதி தனது பதவிக்காலத்தின் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்த பின்னர், மீண்டும் மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தால், அவர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாளை தீர்மானிப்பதற்கும் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நாளை தீர்மானிப்பதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்படும். வேட்பாளர்கள் தமது பரப்புரைப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஐந்து வாரங்கள் ஒதுக்கப்படும்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின், பதவிக்காலம் 19ஆவது திருத்தத்துக்கு அமைய ஐந்தாண்டுகளாகும். அதன் படி ஜனவரி 9ஆம் திகதியுடன் அவரது பதவிக்காலம் நிறைவடைகிறது.

பதவிக்காலம் நிறைவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே, தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு விடுக்கப்பட்டு, டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தின் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், அடுத்துவரும் 45 நாள்களுக்கிடையில் அவர் விரும்பினால், மக்களாணையைக் கோரித் தேர்தலுக்குச் செல்ல முடியும்.



இல்லாவிட்டால், அவரது பதவிக்காலம் முழுமைப்படுத்தப்பட்டதாகக் கருதி செப்ரெம்பர் இறுதி வாரத்துக்குள் தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிடத் தீர்மானித்திருப்பதாக ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரியவை ஆதாரம் காட்டி ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# நயினை நாகபூஷணி அம்பாள் நேற்றுத் தேரேறி அருட்காட்சி


**யாழ்ப்பாணம், ஜூலை 16**

**வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தர தேர்த் திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது.**

**நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற வசந்த மண்டப பூஜையை அடுத்து பிள்ளையார் , முருகனுடன் உள் வீதியுலா வந்த நாகபூஷணி அம்மன் முற்பகல் 9 மணியளவில் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார்.**

**நாகபூஷணி அம்மனின் இரதோற்சவத்தைக் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர். (ஐ)**







## வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை.10

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளலாம் என்றும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்படவேண்டும் என்றும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**அந்த வகையில் நாளை புதன்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – நெடுங்குளம் தாய்மார் கழகம்
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – வசந்தபுரம் CC சனமூக நிலையம்.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – கொலன் தோட்டம்

**நாளை மறுதினம் வியாழக்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – 3 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – 1 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – 2ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை.

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை–**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – எழிலூர் சனசமூக நிலையம்.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – 4 ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – 5ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை.

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்தமின்விநியோக மார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில்–**

தனங்கிளப்பு, மறவன் புலவு, அறு குவெளி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி, கனகரட்ணம் வீதி, நாயன்மார்க்கட்டு, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து பாப்பையா கடை சந்தி வரை, A9 வீதியில் செம்மணியிலிருந்து புகையிரதக் கடவை வரை, A9 வீதியில் இலந்தைக் குளம் வீதியிலிருந்து புகையிரதக் கடவை வரை, AV வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, பூமகள் வீதி, கலைமகள் வீதி, சட்டநாதர் வீதி, யமுனா வீதி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் புங்கா, நாயன்மார்க்கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மோ. சைக்கிளில் ஹெல்மெட்டுக்குள் வைத்து பேசியபடி சென்றபோது செல்போன் வெடித்தது

## ஓசூர் அருகே இளைஞர் ஒருவர் படுகாயம்



ஓசூர் அருகே செல்போன் வெடித்து சிதறியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். புலியரசி கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் என்பவர், மோட்டார் சைக்கிளில் சூளகிரி நோக்கி சென்றுள்ளார். அப்போது ஹெல்மெட்டுக்குள் செல்போனை வைத்து பேசியபடி அவர் சென்றார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் திடீரென செல்போன் வெடித்து சிதறியதில் ஆறுமுகத்திற்கு காது, முகம் உள்ளிட்ட இடங்களில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அவரை மீட்டு அருகாமையில் உள்ள மருத்துவமனையில் முதலுதவி வழங்கி, பின்னர் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழகத்தில் பயங்கரவாத அமைப்புக்காக டில்லியில் நிதி திரட்டிய 14 பேர் சிக்கினர்

## தேசியப் புலனாய்வுத்துறை மடக்கியது

தமிழகத்தில் பயங்கரவாத அமைப்பு ஒன்றைக் காலூன்றச் செய்வதற்காக நிதி திரட்டினர் என்ற குற்றச்சாட்டில் டில்லியில் 14 பேரை தேசியப் புலனாய்வுத்துறை (என்.ஐ.ஏ.) அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

'அன்சாருல்லா' என்ற பயங்கரவாத இயக்கத்தின் பெயரில் தமிழ்நாட்டில் பயங்கரவாத அமைப்பைக் காலூன்றச் செய்வதற்கான நடவடிக்கைகளில் சிலர் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றனர் என மத்திய உளவுத்துறை மூலம் என்.ஐ.ஏ அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் சென்னை மற்றும் நாகையில் 4 இடங்களில் என்.ஐ.ஏ அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனையில் கைத் தொலைபேசிகள், சிம் கார்டுகள், மெமரி கார்டுகள், லாப் - டொப்கள் மற்றும் பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையிலான பனர்கள், நோட்டீஸ்கள், புத்தகங்கள் எனப் பல்வேறு ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

நாகையைச் சேர்ந்த அசன் அலி, ஹாரிஸ் முகமது ஆகிய 2 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னையில் பிடிபட்ட சையது




முகமது புகாரியிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

இந்த சோதனையில் கிடைத்த தகவலின் அடிப்படையில், டெல்லியில் 14 பேரை என்.ஐ.ஏ அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அன்சருல்லா பயங்கரவாத அமைப்புக்கு நிதி திரட்டியதாக கைது செய்யப்பட்ட 14 பேரும் விமானத்தில் சென்னைக்கு அழைத்து வரப்பட உள்ளனர். அதன்பின்னர், பூந்தமல்லியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

## ஏவுகணையில் தொழில்நுட்பக் கோளாறு:

# 'சந்திராயன் - 2' விண்கலத்தின் பயணம் கடைசி நேரத்தில் இடைநிறுத்தப்பட்டது



ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 16

இந்தியாவின் ஸ்ரீஹரிகோட்டாவி லிருந்து நேற்று அதிகாலை 2.51மணிக்கு ஏவப்படவிருந்த சந்திராயன் - 2. 'கவுண்ட் டவுன்' திடீரென தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து சந்திராயன்-2 விண்கலம், அதிகாலை 2.51மணிக்கு விண்ணில் செலுத்தப்பட இருந்தது.

இதற்கான 20 மணி நேர கவுண்ட் டவுன் நேற்று முன்தினம் காலை தொடங்கியது. இந்நிலையில் அதிகாலை 2.51மணிக்கு ஏவப்படவிருந்த சந்திராயன் -2 'கவுண்ட்டவுன்' திடீரென நிறுத்தப்பட்டது.

தொழில் நுட்ப கோளாறு காரணமாக அது நிறுத்தப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. பாகுபலி ஏவுகணை என்றழைக்கப்படும் மார்க் -3 ஏவுகணை மூலம் சந்திராயன் - 2 ஏவப்படவிருந்தது. நிலவின் தென் பகுதியை ஆராயும் பணியை மேற்கொள்வதற்காக சந்திராயன் - 2 ஏவப்படவிருந்தது.

இனி, ஒரு மாதத்துக்குப் பின்பே சந்திராயன் - 2 ஏவப்படும் எனத் தகவல் வெளியாகி உள்ளது. அது ஏவப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ரொக்கெட் ஏவுகணையில் தொழில்நுட்ப கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஏவுகணை ஏவப்படுவதற்கு 56 நிமிடங்கள் 24 நொடிகள் இருக்கையில் கோளாறு கண்டுபிடிக்கப்பட்டது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# சட்டப் பேரவையிலிருந்து தி.மு.கவினர் வெளிநடப்பு

சென்னை, ஜூலை 16

தபால்துறைத் தேர்வில், தமிழ் புறக்கணிக்கப்பட்ட விவகாரம் குறித்து காரசாரமான விவாதம் நடைபெற்ற நிலையில் தி.மு.க, காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

தபால் துறை போட்டித்தேர்வில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்ட விவகாரம் குறித்து தி.மு.க.உறுப்பினர் தங்கம்தென்னரசு, சிறப்பு கவனவீர்ப்பு தீர்மானமொன்றினை பேரவையில் நேற்றுக் கொண்டு வந்து உரை நிகழ்த்தினார்.

தமிழர்கள் மத்திய அரசப் பணிகளில் இணைந்து விடக் கூடாதென திட்டமிட்டு, மத்திய அரசு செயற்படுவதாக தங்கம் தென்னரசு குற்றம் சுமத்தினார்.

அத்துடன் தபால் துறை போட்டித்தேர்வில் தமிழ் மொழியை மீண்டும் சேர்க்க மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் எனவும் தமிழக சட்டப்பேரவையில் இவ்விடயம் குறித்து சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் ஜெயக்குமார், தபால் துறைத் தேர்வில், வினாத்தாள் ஒன்றில் மாத்திரமே தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வினாத்தாள் இரண்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை.

மேலும் இரு மொழி கொள்கையை பின்பற்றும் தமிழக அரசு இவ்விடயம் குறித்து மத்திய அரசை நிச்சயம் வலியுறுத்தும் என அவர் பதிலளித்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் துரைமுருகன், இரு மொழி கொள்கையில் ஒருமித்த கருத்து கொண்டிருக்கும் நிலையில், மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றுமா என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் ஜெயக்குமார், இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் சேர்ந்தே குரல் எழுப்புவோம், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவோம் என பதிலளித்தார்.

பின்னர் பேசிய துரைமுருகன், நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயம் குரல் எழுப்புவார்கள் என்பதில் மாற்று கருத்து இல்லை. ஆனாலும் தமிழக அரசு மத்திய அரசை கண்டித்து ஏன் தீர்மானம் நிறைவேற்றக் கூடாது என மீண்டும் கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறுக்கிட்டு பேசிய துணை முதலமைச்சர், இந்த விவகாரம் குறித்து நாளை நாடாளுமன்றத்தில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்ப இருக்கிறார்கள் என்றார்.

பின்னர் பேசிய முதலமைச்சர் எடப்பாடி, தி.மு.க இந்த விவகாரத்தில் வெளிநடப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனே பேசி வருகின்றது. மேலும் நாடாளுமன்றத்தில் மத்திய அரசு அளிக்கும் பதிலைப் பொறுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து பேசிய துரைமுருகன், தாங்கள் உணர்வோடு இந்த விவகாரம் குறித்து பேசுகின்றோம். ஆனால் தி.மு.க.வை இழிவுப்படுத்தும் வகையில் முதலமைச்சர் பேசியமையால் அதனை கண்டித்து வெளிநடப்பு செய்கின்றோம் எனக் கூறினார்.

அதனைத் தொடர்ந்தே தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த தலாய் லாமா சீனாவில் இருந்துதான்; அத்தேர்வில் இந்தியா தலையிடக் கூடாதாம்



அடுத்த தலாய் லாமா சீனாவில் இருந்துதான் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் இந்த விவகாரத்தில் இந்தியா தலையிடக் கூடாது என்றும் சீனா அறிவித்துள்ளது.

84 வயதை அடைந்துவிட்ட 14ஆவது தலாய் லாமாவுக்கு மாற்றாக புதிய தலாய் லாமாவைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை சீன அரசு மேற்கொண்டுள்ளது.

திபெத் மீது சீனா ஆக்கிரமிப்பு செய்தபோது, 1959 ஆம் ஆண்டு திபெத்தை விட்டு வெளியேறிய தலாய்லாமா, இந்தியாவில் அடைக்கலம் பெற்றார்.

இமாச்சலப் பிரதேசத்தில் தர்மசாலா எனுமிடத்தில் அவருக்கு குடில் அமைத்தும் தந்தது இந்திய அரசு. அவர் முதுமையடைந்து விட்டமையால் புதிய தலாய் லாமா குறித்த ஆலோசனைகள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் சீனா தேர்ந்தெடுக்கும் புதிய தலாய் லாமாவை இந்தியா அங்கீகரிக்காவிட்டால், இருநாடுகளின் உறவையும் அது பாதிக்கும் என்று சீன அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தலாய் லாமாவின் மறு அவதாரம் என்பது மதம், அரசியல், வரலாறு சார்ந்த 200 ஆண்டு பழைமை வாய்ந்த மரபு என்றும், இதில் இந்தியா தலையிடக் கூடாது என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது.

# முழுவதுமாக நீங்குகிறது எல் நினோவின் தாக்கம்!

## அமெரிக்க வானிலை ஆய்வு மையம் தகவல்

**எல் நினோவின் தாக்கம் முழுவதுமாக நீங்கி கொண்டிருப்பதாக, அமெரிக்க வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது. இயற்கை பேரிடர்களின் போது உச்சரிக்கப்படும் பொதுப்பெயர்களில் ஒன்று., எல் நினோ. ஸ்பானிஷ் மொழிப் பெயரான இந்த எல் நினோவை இலங்கை வரை அறியவைத்திருப்பது, அதனால் ஏற்பட்ட பாதிப்புகள்தான். குளோபல் வோர்மிங் எனப்படும், புவி வெப்பமயமாதல் பிரச்சினைக்குப் பின்னர், பன்னாட்டு சமூகத்தால், அறியப்பட்ட, அறிந்திருக்க வேண்டிய ஒரு சொல்லாகவே, எல் நினோவும் மாறியிருப்பது யதார்த்தம்.**

பூமிப்பந்தின், பெரும்பான்மை பரப்பை ஐம்பெருங்கடல்கள்தான் சூழ்ந்திருக்கின்றன. எனவே, நிலப்பரப்பில் நிலவுகின்ற, தட்பவெப்ப மாற்றங்களுக்கும், கடல்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து கொண்டேதான் இருக்கிறது.




குறிப்பாக, அமைதிப் பெருங்கடல் என்று அழைக்கப்படும், மிகப்பெரிய பெருங்கடல்களில் ஒன்றான, பசிபிக் பெருங்கடலின் வெப்பநிலையில் ஏற்படும் மாற்றமே, உலக நாடுகள் பலவற்றின், தட்பவெப்பத்தை தீர்மானிப்பதாக உள்ளது.

இந்த வகையில், கிழக்கு மற்றும் மத்திய பசிபிக் பெருங்கடல் பரப்பில், வழக்கத்தை காட்டிலும், 5 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பம் அதிகரிப்பதால், ஏற்படும் தட்ப வெப்பநிலை மாறுபாட்டிற்கு, எல் நினோ என்று பெயர். பசிபிக் பெருங்கடலில், இரண்டு முதல் ஏழு வருட இடைவெளிகளில் சீரற்ற சுழற்சி முறையில், எல் நினோ ஏற்படுவதற்கான மாற்றங்கள் நிகழ்கின்றன.

பசிபிக் பெருங்கடலில் வீசும் காற்றின் வேகம் மெதுவாக இருந்தாலோ, அல்லது வேறு சில காரணங்களால் கடலில் ஆழமான பகுதியில் இருக்கும் குளிரான நீர் மேல் பக்கமாக வரத் தடை ஏற்பட்டாலோ, இந்த எல் நினோ உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன.

இந்த எல் நினோ பாதிப்பிற்கு உள்ளாகும் நாடுகளில், ஒருபுறம் வரலாறு காணாத வறட்சியும், அல்லது, கடுமையான குளிரும், மறுபுறத்தில், மேகவெடிப்பினால் ஏற்படுவது போன்ற மழைப்பொழிவும், அதனால் பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்படும்.

எல் நினோ பாதிப்பிற்கு, உதாரணமாக, 2015ஆம் ஆண்டில், இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும், கடுமையான வறட்சி நிலவிய போதிலும், சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்கள் வரலாறு காணாத மழைப் பொழிவை எதிர்கொண்டு வெள்ளத்தில் தத்தளித்தன.

இந்நிலையில், கடந்த ஜுன் மாதம் வரையில் நீடித்த எல் நினோ பாதிப்பு, நீங்கிக் கொண்டிருப்பதாக அமெரிக்க வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது. தற்போது பல வீனமடைந்துள்ள எல் நினோ, முற்றிலுமாக நீங்கும் என்றும், இதனால், பருவ காலங்களுக்கு ஏற்ப, பருவமழையும், குளிரும் இருக்கும் என்றும் அமெரிக்க வானிலைஆய்வுமையம் தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையே, கடந்த மாதம் வரையில் நீடித்த எல் நினோ பாதிப்பால், இந்தியாவில், தென்மேற்கு பருவமழை சராசரி அளவை விட, 33 சதவிகிதம் குறைவாக பதிவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியிருக்கிறது.

எல் நினோ பாதிப்பின் தாக்கம் முற்றாக நீங்குகிறது என்ற அறிவிப்பு, இந்தியப் பிராந்திய மக்களுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல சேதி என்பதோடு, தென்மேற்கு பருவமழைக்கு சாதகமாக இருக்கும் என்றும், இந்திய

# பயிற்சி விமான விபத்தில் ஸ்வீடனில் 9 பேர் மரணம்

ஸ்வீடனில் விமானப் பயிற்சியின்போது விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர்.

உமியா எனுமிடத்தில் பாரசூட்டில்இருந்து குதிக்கும் பயிற்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது.



இதனல் பாரசூட் மூலம் அதில் இருந்த வீரர்கள் குதிக்க முயற்சித்தனர்.

ஆனால் அதற்குள் விமானம் தரையில் மோதியதால் 9 பேரும் உயிரிழந்துவிட்டனர்என அதிகாரிகள் அறிவித்தனர். விமானம் விழுந்து நொறுங்கும் காட்சியை சிலர் தம் கைத்தொலைபேசியில் படம்பிடித்துள்ளனர். அந்தக் காட்சிகள் வைரலாகிப் பரவி வருகின்றன.

# ஆப்கன் ஹோட்டலுக்குள் புகுந்து தலீபான்கள் அதிரடித் தாக்குதல்!

## 8 பொலிஸார் பலி; 18 பேர் காயம்

காபூல்,ஜுலை16

ஆப்கானிஸ்தானில் ஹோட்டலுக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பொலிஸார் பலியானார்கள்.



ஆப்கானிஸ்தானில் அரசு படைகளுக்கும், தலீபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரசு படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலானநேட்டோபடைஅங்கு முகாமிட்டு உள்ளது. உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவந்து, ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்ட தலீபான்களுடன் அமைதி பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் தலைமையில் நடைபெறும் பேச்சு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. ஆனாலும் ஆப்கானிஸ்தானில் தலீபான்களின் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில்பக்திஸ்மாகாணத்தின் தலைநகர் குவல்-இ-நாவ் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்குள் தலீபான் பயங்கரவாதிகள் 5 பேர் பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்தனர்.

அங்கு அவர்கள் தங்கள் கண்ணில் பட்டவர்களையெல்லாம் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. இது குறித்த தகவல் கிடைத்ததும், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படைவீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து ஹோட்டலைச் சுற்றிவளைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தீவிரவாதிகளுக்கும்,பொலிஸாருக்கும்இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. சுமார் 5 மணி நேரம் இந்த துப்பாக்கிச் சண்டை நீடித்தது. இதில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதே சமயம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் பொதுமக்கள் உள்பட 18 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஒரு லட்சம் கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை அபராதம் பாகிஸ்தான் அரசுக்கு விதித்து சர்வதேச நீதிமன்றம் உத்தரவு!

இஸ்லாமாபாத்,ஜுலை16

பாகிஸ்தானுக்கு சுமார் ஒரு லட்சம் கோடிரூபாவுக்கும்அதிகமானதொகை அபராதம் விதித்து சர்வதேச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள ரெகோ நகரில் தங்கம் மற்றும் தாமிரம் ஆகிய வளங்கள் மிகுந்து காணப்படுகின்றன. இதனால் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுரங்க நிறுவனங்கள் இங்கு தங்கம் மற்றும் தாமிரம் வெட்டி எடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.



அந்த வகையில் சிலி மற்றும் கனடாவை சேர்ந்த 'டிசிசி' என்கிற கூட்டு நிறுவனத்துக்கு ரெகோ நகரில் சுரங்க பணிகள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டு அந்த நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை பலுசிஸ்தான்மாகாணஅரசு திடீரென ரத்து செய்தது. இதை எதிர்த்து, அந்நிறுவனம் பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. ஆனால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தம் பாகிஸ்தான் சட்டத்துக்கு எதிரானது எனக் குறிப்பிட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

அதனைத் தொடர்ந்து, அந்த நிறுவனம் இந்த விவகாரத்தை சர்வதேச நடுவர் நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றது. அங்கு இந்த வழக்கு விசாரணை நடந்து வந்தது. இதில் பாகிஸ்தான் அரசு சட்டவிரோதமான முறையில் 'டிசிசி' நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்வது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் அரசுக்கு 597 கோடி அமெரிக்க டொலர் (இலங்கை நாணய மதிப்பில் ஒரு லட்சம் கோடி ரூபாவுக்கும் அதிகம்) அபராதம் விதித்து சர்வதேச நடுவர் தீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

பாகிஸ்தான் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வரும் நிலையில்சர்வதேசநீதிமன்றின் இந்த உத்தரவு பாகிஸ்தானுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

காலைக்கதிர் Kalaikathir



**வெண்கரம் அமைப்பு (பிரத்தியேக கல்வி நிலையம்) மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி இணைந்து முன்னெடுக்கும் மாணவக் கல்வி வழிகாட்டல் நிகழ்வு சுழிபுரம் வெண்கரம் கல்வி நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய அதிதி உரை இங்கு தரப்படுகிறது.**

# மாணவர்களே காலத்தை வீணடிக்காது படியுங்கள்; தவறினால் திண்டாட்டம்தான்!

வெண்கரம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற இந்த நிகழ்வில் எமது கட்சியும் கலந்துகொண்டுள் ளது. சமூகத்தின் அடிமட்டத்தில் இருக்கும் வறிய மாணவ சமுதாயத்தின் மீது இருக்கும் எமது கரிசனையே எங்களை ஒன்றுபட்டு செயல்பட வைத்துள்ளது. வடமாகாண கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாணவ மாணவியர்களுக்கான சில வழிகாட்டல்களையும், கற்றல் வழிமுறைகளையும் இத்தருணத்தில் தெரிவிக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

இந்த நாட்டில் ஏற்பட்ட 30 ஆண்டுகளுக்கு மேலான தொடர் யுத்தத்தின் காரணமாக தமிழ் மக்களின் கலை, கலாசாரங்கள் வாழ்வியல் விழுமியங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையுடன் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இளைய தலைமுறையினரில் பலர் உயிர் அச்சுறுத்தலுக்குப் பயந்து தமது கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தி ஐரோப்பிய நாடுகளுக்கும் பிற நாடுகளுக்கும் நகரத் தொடங்கிவிட்டனர். மேற்படி நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்களில் கல்விப் பின்புலத்துடன் சென்றவர்கள் நல்ல நிலைமைகளில் இருக்கின்ற போதிலும் ஏனையவர்கள் கஷ்டமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றமையை நாம் அவதானித்திருக்கின்றோம்.

அப்படி இருந்தும் தமது உறவினர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அவர்களே பலவித உதவிகளைச் செய்து வருகின்றனர். எனினும் இங்குள்ள மக்களின் மனோநிலையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளைப் பெற்றபெற்றோர்களும் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதிலேயே குறியாக இருக்கின்றார்கள். பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் தமது பிள்ளைகளை வெளிநாடு களில் உள்ள இளைஞர்களுக்கு திருமணம் முடித்து வைக்கவே விரும்புகின்றனர். இவ்வாறு வெளியே செல்லும் சில குடும்பங்கள் சந்தோஷமாக இருக்கின்றன. பலர் தூண்டிலில் அகப்பட்ட மீன்களாக தமது நிலையில் இருந்து விடுபட முடியாமலும் அதே நேரம் மன அமைதியின்றியும் வாழ்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் எந்த வழியிலாவது பணத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற அவாவில் தாங்களே தங்களது பிள்ளைகளைப் பலிக்கடாக்களாக மாற்றுவதைப் பற்றிப் பல பெற்றோர்கள் சிந்திப்பதில்லை. இது யுத்த காலம் இல்லை. வழமை நிலை திரும்பியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் மீண்டும் எம்மவர் வெளிநாடு செல்ல வேண்டுமா என்று கேள்வி எழுகின்றது.

### வாள்வெட்டுச் சம்பவங்களில்...

எல்லோரும் வெளியேறத் தலைப் பட்டால் வேற்று இனத்தவர்கள் வந்து இங்கு குடியேறுவதை நாம் எப்படி தடுக்க முடியும்? எமது மக் கள் இங்கு நிலைத்து நின்று சாதிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். பல நெருக்கடியான காலங்களில் கூட தமது ஒழுக்க நிலைகளில் இருந்து பின்வாங்காத எமது சமூகம் தற்போது பலவிதமான சீரழிவுக்கு உட்பட்டிருக்கின்றமை மன வருத்தத்தை தருகின்றது. இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். மாணவர்களிடை யேயும் பெற்றோர்களிடை யேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும். வெளியே செல்ல இருக்கும் பல மாணவர்கள்தான் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு வெளிநாட்டுப்பணம் வரு கின்றது. அத்துடன் வெளியே செல்ல வாய்ப்பும் கிடைக்கின்றது. வெளியே செல்லும் வரையில் பலவிதமான தப்பான காரியங்களில் எம் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர் என அறிகின்றோம்.

எனவே இளைஞர் யுவதிகளின் சிந்தனைகள் சிதறிவிடப்படாமல் பாதுகாப்பதற்கு அவர்கள் அதிகளவு நேரங்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது பழமொழி. ஆனால் கூடுதலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உயர்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கு அவர்களின் பொருளாதார நிலைமைகள் இடையூறாகக் காணப்படுகின்றன. இதனால் அவர்கள் தமது பிள்ளைகளைப் பற்றிய கல்வி ரீதியான விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாது அல்லல்படுகின்றனர். பிள்ளைகளும் ஏனோ தானோ என்று வளர்ந்து வருகின்றார்கள்.

கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட வயதில் வழங்கப்பட வேண்டியதொன்று. இளமையிற் கல் என்றார் ஒளவையார். காலம் தப்பிக் கற்பவர்கள் வெகு சிரமப்பட்டே தமது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்கின்றனர். சுமார் 70 வருடங்களுக்கு முன்பு நாம் கற்ற கல்வி முறைமைக்கும் இப்போதைய கல்வி முறைமைக்கும் பெரிய வேறுபாடுகள் உண்டு.

எமது காலத்தில் கல்வி கற்பதும் விளையாடுவதுமே எமது பொழுதுபோக்கு. வானொலி இருந்தது ஆனால் தொலைக்காட்சி சாதனம் இல்லை. கணினி இல்லை. போதைப்பொருள் இல்லை. அதனால் நிறையப் புத்தகங்களை ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி மூலமாகவும் வாசிக்கக் கூடியதாக இருந்தது. வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனை முழுமையடையச் செய்யும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

### மொழி, அறிவு விருத்தி அடையும்

ஆகவே தான் நான் கூறுகின்றேன் – நீங்கள் இயலக் கூடிய அளவு வாசிப்புக்காக நேரத்தை ஒதுக்குங்கள் என்று. வாசிப்பில் ஈடுபட ஈடுபட உங்கள் மொழி அறிவு விருத்தியடையும். பல் அறிவும் மேம்படும். எமது காலத்தில் ஆங்கில மொழிக் கல்வி வழக்கில் இருந்ததால் நாம் ஆங்கில மொழியை இலகுவாகக் கற்றுக் கொண்டோம். உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் முறையாக் கிடைக்கவில்லை. நான் என் கல்வி அனைத்தையும் ஆங்கிலத்திலேயே செய்தவன்.

எனக்கு முன்னைய மாணவரான பேராசிரியர் A.W.மயில்வாகனம் அவர்கள் தான் எமது கல்லூரியில் படித்த காலத்தில் அதாவது 1935 தொடக்கம் 1945ம் ஆண்டு வரையில் தமிழில் பேசினால் பிரம்படி கிடைக்கும் என்று கூறினார். இன்று ஆங்கில மொழி மூல கற்கையில் ஈடுபட்டிருப்பவர்களும் மேலதிக விளக்கங்களை தமிழிலேதான் பெற்றுக் கொள்கின்றனர். ஆங்கிலத்தை முறையாகக் கற்பிப்பதற்கு ஆசிரியர் தட்டுப்பாடு ஒரு பெரும் பிரச்சினை.

**வெளிநாடுகளுக்கு ஏன் ஓட வேண்டும் இங்கேயே 'இனியவாழ்வு' வாழலாம்!!**

நான் முதலமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் இங்கிலாந்தில் இருந்தோ அல்லது இந்தியாவில் இருந்தாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கடமையாற்ற ஆசிரியர்களை தருவிப்பது பற்றி பிரஸ்தாபித்திருந்தேன். ஆனால் கல்வித்துறைக் கொள்கைகளில் மாற்றங்களை செய்வதற்கு மாகாண அமைச்சுக்கு அனுமதி கிடைக்கப் பெறாமையால் அது கைகூடவில்லை. எனினும் எமது அலுவலர்கள் பலரை British Council க்கு அனுப்பி தேர்ச்சி பெறச் செய்தேன்.

ஆகவே எங்கள்மாணவர்கள் முதலாவதாக மொழி அறிவைத் தேடிக் கொள்ளவேண்டும். அடுத்ததாகத் தமது கல்விக்காக சரியான துறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் தேர்ந்தெடுக்கின்ற துறையினூடாக ஓய்வு பெற்ற பின்பும் கடமையாற்றக் கூடிய தொழில்களைத் தேர்ந்தெடுக்கலாம். உதாரணமாக மருத்துவத் துறை, வக்கீல் தொழில், பொறியியல்துறை, நில அளவை,படவரைஞர் தொழில், ஆங்கில ஆசிரியர் தொழில் ஆகிய துறைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படக்கூடியன.

இதே போன்று இன்னும் பல தொழில்களை நீங்கள் தெரிவு செய்யலாம். என்ன தொழிலாக இருந்தாலும் அதில் ஒரு பற்றுறுதியும் முயற்சியும் தேவை. இவை சரிவரக் கிடைக்கப் பெற்றால் வாழ்வு இனிதாக அமையும். கல்வி ஒருவனை முழுமையடையச் செய்கின்றது. கல்வியால் ஒருவனின் பார்வையானது குறுகியதாக இராது பரந்துபடுகின்றது.

ஒரு குளத்தில் தவளை ஒன்று இருந்தது. ஒரு நாள் நிலத்தில் வாழும் தவளை ஒன்று கிணற்றில் விழுந்து விட்டது. புதிய தவளையிடம் பழைய தவளை கேட்டது 'நீ எங்கிருந்து வருகிறாய்' என்று 'நான் வெளியுலகத்தில் இருந்து வருகின்றேன்' என்றது புதிய தவளை. 'உன் வெளியுலகம் எனது கிணற்றுலகம் போல் இவ்வளவு அகன்றதாகவும் பரந்ததாகவும் இருக்குமா?' என்று கேட்டு பழைய தவளை கிணற்றின் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்குப் பெருமையாக குதித்துக் கேட்டது. புதுத் தவளை சிரித்தது. 'உனக்குத் தெரிந்தது இந்தக் கிணறு தான். நான் வாழ்ந்தது உலகம். இதைப் போல் எவ்வளவோ பெரியது அது' என்றது. ஆனால் பழைய தவளைக்கு அது விளங்கவில்லை. அது எப்படி என் கிணற்றிலும் பார்க்க பரந்த அகன்ற ஓர் இடம் இருக்க முடியும் என்று சிந்தித்தது. ஆனால் அதனால் அவ்வாறான நிலத்தை, சூழலை கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை. அப்படித்தான் கல்வியுடையவனுக்கும் கல்வி இல்லாதவனுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம். படித்தால் பலதையும் விளங்கிக் கொள்ள முடியும். படிப்பில்லாதவருக்கு ஒரு சில விடயங்கள் மட்டும் தெரியும், புரியும்.

வெளிநாடுகளுக்கு நாங்கள் பயணித்து வதிவது என்பது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் எனக்கூற முடியாது. அந்த நாடுகளில் அரசியல் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்ற போது அந்த நாடுகளில் உள்ள வெளிநாட்டவர்கள் திருப்பி அனுப்பப் படுவதற்குக்கூட வாய்ப்புக்கள் உண்டு. எனவே எமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பாமல் எமது நாட்டிலே எமது பிள்ளைகள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு வழிவகைகள் செய்து தரப்பட வேண்டும்.

இவ்வாறான சூழலில் வெண்கரம் அமைப்பு பாடசாலை மாணவர்களுக்கு இலவச பிரத்தியேக கல்விகளை வழங்க முன்வந்திருக்கின்றமை மகிழ்விற்குரியது. இது ஒரு பிரத்தியேகக் கல்வி நிலையம். அதன் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடலாமோ என்று ஒருவர் கேட்டார். நான் கூறினேன் – 'எனக்குத் தேவையானது எமது மாணவ சமுதாயத்தின் வளர்ச்சி. அவர்கள் எவ்வாறான மாணவர்கள், யார் பராமரிக்கும் மாணவர்கள் என்பது எனக்கு ஒரு பொருட்டல்ல. தமிழர்களின் மாணவ சமுதாயம் மறுமலர்ச்சி பெற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. யார் அந்த மாணவர்கள் என்பது தேவையற்றது' என்றேன்.

இந்த அமைப்பில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் முழுநேரக் கடமைகளில் ஈடுபடுகின்றமையால் அவர்களுக்கு ஒரு சிறிய தொகை அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது. இந்த அன்பளிப்பை வழங்குவதற்கு நோர்வே சும்மோரா பகுதி வாழ் ஈழத்தமிழ் மக்களின் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளது. எமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகள் தொடர்பில் எம்மைவிட கடல்கடந்த நாடுகளில் வாழும் எமது உறவுகள் அதிக அக்கறை கொண்டிருக்கின்றமை ஓர் ஆரோக்கியமான சூழலாகும்.

எனவே அன்பார்ந்த மாணவர்களே! பாடங்களைக் கற்கின்ற இவ்வேளையில் படிப்பில் அதிக ஆர்வம் காட்டுங்கள். இலங்கையைப் பொறுத்த வரையில் க.பொ.த(உயர்தர) பரீட்சையே ஒரு மாணவனின் அல்லது மாணவியின் எதிர் காலத்தைத் தீர்மானிக்கின்ற காரணியாக அமைகின்றது. A/L வகுப்பில் அந்த இரண்டு வருடங்களும் உங்களை வருத்தி உழைப்பீர்களாயின் உங்கள் எதிர்காலம் வளமானதாக அமையும். A/L படிக்கின்ற காலத்தில் TV உடனும் Hand phone உடனும் வெட்டிப் பேச்சுப் பேசுவதிலும் காலத்தை கழித்தால் முழு வாழ்க்கைக் காலமும் திண்டாட்டமானதாகவே அமையும். TV பாவியுங்கள். ஆனால் குறிப்பிட்ட கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் பாருங்கள். தினமும் வரும் செய்திகளைக் கேளுங்கள். சின்னத்திரை நாடகங்களை இரண்டு வருடங்கள் கழித்து You Tube இல் பாருங்கள். Hand phone பாவியுங்கள்.

ஆனால் முக்கியமான தேவைகளுக்காகப் பாவியுங்கள். உங்கள் காலம் மிக மிக முக்கியமானது என்பதை மறந்து விடாதீர்கள். போன கால நேரம் திரும்பவும் வராது. உங்கள் A/L படிக்கின்ற 2 வருட காலம் கடந்துவிட்டால் மேலும் ஒரு வருட காலம் உங்கள் முன்னேற்றம் தாமதமாகும். ஆகவே அந்தக் காலத்தைக் கவனமாகக் கழியுங்கள். சீக்கிரத்தில் உங்கள் பரீட்சையை மேன்மையுடன் தேர்ச்சி அடையப் பாருங்கள்.

என் வாழ்க்கையில் இருந்து ஒரு கதை சொல்கின்றேன். சட்டக் கல்லூரி இடை வகுப்பின் போதுதான் நான் 1962ல் சட்ட மாணவ சங்கத் தலைவர் ஆனேன். அதனால் ஞாயமான வேலை இருந்தன. படிக்க நேரமில்லை. எனினும் கிடைத்த நேரமெல்லாம் படித்தேன். முடியுமான வரையில் வகுப்புகளுக்குச் சென்று வந்தேன். ஒரு பாடத்திற்கு சில வகுப்புகளே பாட நெறியில் இருந்தன. அந்தப் பாடத்தை ஆசிரியர் சொல்லித் தந்த அந்த வகுப்புகளில் பங்கு பற்ற முடியவில்லை. பரீட்சை வந்தது. 9 பாடங்களில் ஒரு பாடம் மட்டும் நான் எதுவுமே தெரியாத நிலையில் இருந்தேன். அந்தப் பாடம் பரீட்சையில் கடைசிப் பாடம். 8 ஆவது பாடப் பரீட்சை முடிந்ததும் 9 ஆவது பாடத்தில் நான் சித்தி அடைந்தால் நான் முழுப் பரீட்சையிலும் தேறிவிடுவேன் என்று தெரிந்தது. அடுத்தநாள் பரீட்சை. முழு இரவும் கண் துஞ்சாமல் கண் விழித்துப் படித்து அந்தப் பாடத்திலும் தேர்ச்சி அடைந்தேன். எனக்குத் தெரியும் அந்தப் பாடத்தில் கோட்டை விட்டால் எனது படிப்பு தள்ளிப் போய்விடக் கூடும்என்று. ஆகவே உங்கள் பரீட்சையை இரண்டு வருட காலத்தினுள் படித்துத் தேர்ச்சியடையப் பாருங்கள். எது எமது வாழ்க்கைக்கு உதவும் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு உங்கள் கல்வியை நீங்கள் தொடர வேண்டுகின்றேன். உங்கள் ஆசிரியர்களும் நாமும் என்றென்றும் உங்கள் வழிகாட்டிகளாக விளங்குவோம்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
செயலாளர் நாயகம், தமிழ் மக்கள் கூட்டணி

# ரணிலும் கூட்டமைப்பினரும் நாட்டை அழிக்கிறார்களாம்!

## விமலின் கண்டுபிடிப்பு இது

**கொழும்பு, ஜூலை 16 பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து இந்த நாட்டை அழிக்கின்றார்கள். இவர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தக்க பாடம் புகட்டவேண்டும்.**



– இவ்வாறு மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் ரணில் அரசைக் கவிழ்க்க நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இல்லாமலாக்கி விட்டார்கள். கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தபடியால் ரணில் அரசு மீண்டும் காப்பாற்றப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்று ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். இந்த அரசு தொடர்ந்து ஆட்சியில் இருப்பது அவர்களுக்குத் தான் வெட்கக்கேடு.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து இந்த நாட்டை அழிக்கின்றார்கள். இவர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தக்க பாடம் புகட்ட வேண்டும்.

எதிர்வரும் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியே ஆட்சியமைக்கும். அழிவடைந்து கொண்டிருக்கும் இந்த நாட்டுக்கு நல்ல காலம் விரைவில் பிறக்கும் – என்றார். (ஐ)

## ஐ.தே.கவைப் பிளவுபடுத்தும் தீவிர முயற்சியில் சந்திரிகா!

### ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 16

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முயற்சிக்கிறார் என அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.



எனவே, கட்சியைச் சீர்குலைக்கும் அவரது முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கதிர்காமத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல்ல தொகுதியில் அமைப்பாளராக இருந்தும் அந்தத் தொகுதியில் கூட வெற்றி பெற முடியாத சந்திரிகாவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்வது என்பது வேடிக்கையான விடயமாகும்.

அனைத்துக் கட்சிகளின் செயற்பாடுகளிலும் தலையிடலாமென சந்திரிகா நினைக்கின்றார். அதனடிப்படையில் எமது கட்சியின் செயற்பாடுகளுக்குள் நுழைந்து பிளவை ஏற்படுத்த முனைகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் சந்திரிகாவை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினரும் கட்சியைச் சீர்குலைக்கவே விரும்புகின்றனர். ஆகையால் அவர்களுக்கு அத்தகையதொரு வாய்ப்பை ஒருபோதும் வழங்கக்கூடாது.

நாட்டை நேசிக்கும் தூரநோக்கம் கொண்ட ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக உரிய தருணத்தில் நிறுத்துவோம் – என்றார். (ஐ)

## பிரேரணையை ஆதரிக்குமாறு ஜே.வி.பியினர் கேட்கவில்லை

### மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 16

அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறு மக்கள் விடுதலை முன்னணி கேட்கவில்லையென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசின் செயற்பாட்டின் மீது எமக்கு விருப்பமில்லாத காரணத்தினாலேயே நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

எங்களிடம் வந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ள மக்கள் விடுதலை முன்னணிக்கு தெரிந்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஒருபோதும் எம்மிடம் வந்து கேட்கவில்லை.

மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள், பிரதமர் ரணிலை இரவில் சென்று சந்திப்பதுடன் அவருடனேயே உறங்குகின்றனர். எம்மிடம் ஒன்றாக இணைந்து எதனையும் அவர்கள் செய்யவில்லை.

தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு யானையல்ல புலியைக் கூடக் கொடுப்பார்கள். ஆனால் மக்கள் ஒருபோதும் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

நாட்டு மக்கள் மிகவும் திறமையானவர்கள். அவர்களுக்கு ஆட்சியாளர்கள் அனைவர் பற்றியும் நன்கு தெரியும். இதற்கு முன்னர் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களுக்காக எதனையும் செய்யவில்லை என்பதுடன் சாப்பாட்டுக்கூட கஷ்டப்படும் நிலைமையை மக்களுக்கு உருவாக்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி மக்கள் வழிபாட்டுத் தலங்களுக்குக் கூட அச்சமின்றி செல்ல முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது – என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆடிப் பிறப்பு விழா நவாலியில்

*யாழ்ப்பாணம், ஜூலை 16*

*ஆடிப்பிறப்பு இன்று இடம்பெறுவதையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.*

*தமிழ்ச்சங்க உறுப்பினர் ஜீவா. சஜீவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாசின் ஆசியுரை தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசனின் சிறப்புரை கலாநிதி ஆறு. திருமுருகன் ஆற்றும் நினைவுப் பேருரை என்பன இடம்பெறும்.*

*சிறப்பு நிகழ்வாக யாழ் முன்னணி இசைக் குழுக்களின் கலைஞர்கள் இணைந்து சோமசுந்தரப் புலவரின் பாடல்களால் அமைந்த இசையரங்கை நடத்தவுள்ளனர். (ஐ)*

## பதவி விலகத் தயாராகிறார் இந்திரஜித் குமாரசுவாமி!

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து விலக இந்திரஜித் குமாரசுவாமி தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தனிப்பட்ட காரணங்களினால், தொடர்ந்தும் தன்னால் ஆளுநராக பொறுப்பு வகிக்க முடியாதுள்ளதாகவும் இதனால், பதவியில் இருந்து விலக எதிர்பார்த்துள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் இருந்து இந்திரஜித் குமாரசுவாமி விலகலாம் எனக் கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் பல முறை அவர் பதவியில் இருந்து விலக விரும்பியதுடன் அரசின் கோரிக்கைக்கு அமைய தொடர்ந்தும் பதவியில் இருந்து வருகிறார். இம்முறை அவர் கட்டாயம் பதவியில் இருந்து விலகிவிடுவார் எனப் பேசப்படுகிறது. (ஐ)

## நாடாளுமன்று தாக்கப்படவுள்ளதாக பொய்த் தகவல் கொடுத்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 16

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட உள்ளதாக கடந்த 12 ஆம் திகதி இரவு 119 என்ற இலக்கத்துக்கு அழைப்பு எடுத்து, பொய்த் தகவல் வழங்கிய ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், இது குறித்து புறக்கோட்டையில் உள்ள முஸ்லிம் பள்ளி ஒன்றில் வைத்து 8 பேர் திட்டமிட்டுள்ளனர் எனவும் அவர் அலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டபோது பொய்த் தகவல் என தெரியவந்துள்ளது. பின்னர் பொய்த் தகவல் வழங்கிய நபர் எல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நபர் வாடகைக்கு உள்ள வீட்டு உரிமையாளரின் அடையாள அட்டையைப் பயன்படுத்தி அந்த சிம்மை வாங்கியுள்ளார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

## தூக்குத் தண்டனைக்கு சஜித் பிரேமதாஸ ஆதரவு

கொழும்பு, ஜூலை 16

பொய்ச் சாட்சிகளை வழங்கி, சட்டத்துக்குப் புறம்பாக, வஞ்சகமான முறையில் மரண தண்டனை வழங்குவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஆயினும் நீதியான முறையில் போதைபொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருக்குமாக இருந்தால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதில் தவறு இல்லை என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கும் நாம் எதிர்கொண்டுள்ள நவீன ரக பயங்கரவாதத்துக்கும் எவ்வாறு பதிலளிப்பது என்பதை நாடென்ற ரீதியில் தீர்மானிப்பது அவசியமானதாகுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

northern PC Park

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது சென்.லூசியா மகா வித்தியாலய அணி

மன்னார் உதைபந்தாட்டச் சம்மேளத்தினால் நடத்தப்படும் மன்னாரின் முதல்வன் - 01 வெற்றி கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பள்ளிமுனை சென்.லூசியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஜோசப் வாஸ்நகர் ஐக்கியம் ஏ அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 05:03 என்ற கோல் கணக்கில் சென்.லூசியா மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது. (ஐ)



## நைட் ரைடர்ஸ் அணியிலிருந்து வெளியேறும் பிரபல ஜாம்பவான்

ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிறார் என ஜக் கலீஸ் அறிவித்துள்ளார்.



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக இருந்தவர் ஜக் கலிஸ். ஓய்வு பெற்ற பின்னர் ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடிவந்தகலிஸ், கடந்த 2015ஆம் ஆண்டு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக பொறுப்பேற்றார்.

அவரது தலைமையில் மூன்று முறை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பிளே – ஓப் சுற்றுக்கு முன்னேறியது. ஆனால், இந்த ஆண்டு ஐ.பி.எல்லில் மோசமான தோல்வியைச் சந்தித்த கொல்கத்தா அணி, லீக் சுற்றுடன் வெளியேறியது.

இதனைத் தொடர்ந்து அணியை மேம்படுத்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் நிர்வாகம் விரும்பியது. இந்நிலையில், தலைமை பயிற்சியாளர் கலிஸ் மற்றும் துணை பயிற்சியாளர் சைமன் காடிச் ஆகியோர் அணியில் இருந்து வெளியேறுகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கலிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் 2011இல் இருந்து வீரர், ஆலோசகர், தலைமைப் பயிற்சியாளர் எனப் பணியாற்றியுள்ளேன். தற்போது புதிய வாய்ப்பைத் தேடுவதற்கான நேரம் வந்துவிட்டது.

ஏராளமான நினைவுகள் உள்ளன. சக வீரர்கள், உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகத்திற்கு கட்டாயம் நன்றி கூற விரும்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப்

*மன்னார் உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் மன்னாரின் முதல்வன் - 01 வெற்றி கிண்ணத்திற்கான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பனங்கட்டிக் கொட்டு சென். ஜோசப் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா அணி மோதியது.*

*இவ் ஆட்டத்தில் 02:01 என்ற கோல் கணக்கில் சென். ஜோசப் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.*

*சென். ஜோசப் அணி சார்பாக நிறஞ்சன் இரு கோல்களைப் பெற்றுக் கொடுத்தார்.*



## நியூசிலாந்திடம் மன்னிப்பு கேட்டார் பென் ஸ்டோக்ஸ்

இங்கிலாந்து, நியூசிலாந்து இடையேயான உலகக் கிண்ண இறுதிப்போட்டியின் கடைசி ஓவரில் நிகழ்ந்த சர்ச்சைக்குரிய 4 ஓட்டங்கள் குறித்து வில்லியம்சன் மனம் திறந்துள்ளார்.

கடைசி 3 பந்தில் இங்கிலாந்து வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைபட்ட நிலையில், களதடுப்பில் ஈடுபட்ட நியூசிலாந்து வீரர், வீசிய பந்து பென் ஸ்டோக்ஸ் துடுப்பில் பட்டு பவுண்டரிக்குச் சென்றதால் இங்கிலாந்து அணிக்கு 6 ஓட்டங்கள் வழங்கப்பட்டது. இதன் மூலம் போட்டி சுப்பர் ஓவர் வரை செல்ல நேரிட்டது.

போட்டிக்கு பின் பேட்டியளித்த நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் கூறியதாவது :–

பந்து ஸ்டோக்ஸின் மட்டையைத் தாக்கியது வெட்கக்கேடானது, நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. இதுபோன்ற தருணங்களில் இனி ஒருபோதும் இவ்வாறு நடக்காது என்று நம்புகிறேன்.

இந்த நிலைக்கு எங்களை அழைத்துச் செல்ல நியூசிலாந்து தரப்பினர் மிகுந்த ஆதரவு அளித்தனர். வீரர்கள் இந்த நேரத்தில் சிதைந்து விடுகின்றனர். அது பயங்கரமானதாக இருக்கிறது. இந்தக் கட்டத்தில் தோல்வியை ஜீரணிப்பது மிகவும் கடினம். ஆனால் எங்கள் வீரர்களிடமிருந்து ஓர் அருமையான முயற்சியை காண முடிந்தது என்று நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் கூறியுள்ளார்.




அந்த அதிர்ஷ்டமான தற்செயலான தொடுதலுக்காக ஸ்டோக்ஸ், நியூசிலாந்திடம் மன்னிப்பு கேட்டுள்ளார். கடைசி ஓவரில் பந்து மட்டையைத் தாக்கி நான்கு ஓட்டங்களுக்குச் சென்றதற்காக நான் கேனி வில்லியம்சனிடம் மன்னிப்பு கேட்டேன் என ஸ்டோக்ஸ் தெரிவித்தார். (ஐ)

## வீரர்களைக் கடன் வாங்கி விளையாடிய இங்கிலாந்து

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணியில் நிறைய வீரர்கள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.



வீரர்களை கடன் வாங்கி விளையாடிய அணி என இங்கிலாந்து அணி கூறப்படுகிறது.

அதாவது, இங்கிலாந்து அணியின் மிகப்பெரிய பலமாக அணித்தலைவர் இயன் மோர்கன், தொடக்க வீரரான ஜேசன் ரோய், சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ், மோயின் அலி, வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் ஆகியோர் விளங்குகின்றனர். ஆனால் இவர்களுக்குள் மிகப்பெரிய ஒற்றுமை உள்ளது.

இந்த வீரர்கள் அனைவரும் இங்கிலாந்தில் பிறக்காமல், வெவ்வேறு நாடுகளில் பிறந்து இங்கிலாந்து அணிக்காக விளையாடுகின்றனர்.

இங்கிலாந்து வீரர்கள் பிறந்த நாடு விவரம்:

இயன் மோர்கன் (கப்டன்) – டப்லின், அயர்லாந்து

ஜேசன் ரோய் (தொடக்க வீரர்) – டர்பன், தென்னாபிரிக்கா

பென் ஸ்டோக்ஸ் (சகலதுறை வீரர்) – கிறிஸ்ட் சர்ச், நியூசிலாந்து

ஜோப்ரா ஆர்ச்சர் (வேகப்பந்து வீச்சாளர்) – பார்படாஸ், கரீபியன் தீவு

மோயின் அலி (சகலதுறை வீரர்) – காஷ்மீரிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் மோயின் அலியின் தாத்தா

அடில் ரசித் – பிராட்போர்ட் இங்கிலாந்து (ஆனால் இவர் மோயின் அலியைப் போன்று பாகிஸ்தானைப் பின்புலமாகக் கொண்டவர்).

## கன்னியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலையின் ஒரு அப்பட்ட மான வெளிப்பாடாகும்.

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சகல தமிழ் கட்சிகளும் எமது இனத்தின் எதிர்கால இருப்பு பெரும் ஆபத்தில் இருக்கின்றது என்பதை உணர்ந்து தமக்கு இடையிலான காழ்ப்புணர்வுகள், அரசியல் போட்டிகளை மறந்து ஒன்றுபட்டு முழுமையான அரச எதிர்ப்பு அரசியலை மேற்கொள்ள ஆயத்தமாக வேண்டும். இந்த அரசு கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலையை முடுக்கிவிட்டுள்ளமையை தமிழ் தேசிய கூட்டமைப்பு இனிமேலாவது ஏற்றுக்கொண்டு அரசுக்கு முண்டு கொடுக்கும் துரோகச்செயலை நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று மாலை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

தமிழ் மக்களின் ஆயிரம் ஆயிரம் காலங்களுக்கு முற்பட்ட இந்த புராதன வரலாற்றுப் பகுதியை தமிழ் மக்கள், தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்களைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் பிள்ளையார் ஆலய அத்திவாரத்தை உடைத்து விகாரை கட்டப்பட்டுவரும் செய்தி தமிழ் மக்களின் நெஞ்சங்களைப் பிளப்பதுபோல இருக்கின்றது.

இலங்கையின் ஆதிவாசிகளான தமிழ் மக்களின் இருப்பு இன்னும் இந்த நாட்டில் எத்தனை காலத்துக்கு இருக்கப்போகின்றது என்ற நிதர்சனமான கேள்வியையும் மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தும் வகையில் வடக்கு – கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு பௌத்தமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் காணி அபகரிப்பு நடவடிக்கைகளும் பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகளும் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அரச இயந்திரத்தின் பணிகளாக்கப்பட்டு இராணுவத்தின் உதவியுடன் முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு வாழ்விடங்களின் வரலாறு திட்டமிடப்பட்டவகையில் திரிபுபடுத்தப்பட்டு செயற்கையான சான்றுகள் உருவாக்கப்பட்டு பௌத்தமயமாக்கலும் சிங்கள மயமாக்கலும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், மகாவலி அதிகாரசபை, வீடமைப்பு அதிகாரசபை, வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம், இராணுவம் போன்றன நன்கு ஒருங்கிணைந்தவாறான நடவடிக்கைகள் மூலம் வெளிப்படையாகவே முன்னெடுத்துவரப்படுகின்றன.

சிங்கள அரச தலைவர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை இவற்றுக்குப் பகிரங்கமாகவே அளித்துவருகின்றனர். இராணுவத்தினர் இதன் பொருட்டு அவர்களாலேயே பாவிக்கப்படுகின்றனர்.

கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தை உடைத்து அந்த இடத்தில் விகாரை கட்டுவதை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் நேரடி உத்தரவுகளை வழங்கி ஊக்குவித்துள்ளனர் எனசெய்திகள் வெளிவந்துள்ளன.

கன்னியாவில் மட்டுமன்றி வடக்கு கிழக்கின் ஏனைய இடங்களிலும் பெருமளவில் இந்த நடவடிக்கைகள் திடீரென்று முழுமூச்சாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. முல்லைத்தீவு, கொக்கிளாயில் பௌத்த மக்கள் எவரும் இல்லாத இடங்களில் விகாரை அமைக்கப்படுவதை எம்மால் தடுக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் பெரியளவிலானசிங்களக்குடியேற்றத்துக்கான ஆயத்தமாக நாவற்குழியில் பௌத்த விகாரை எனது வீட்டில் இருந்து ஒரு சில மைல்கள் தூரத்தில் அமைக்கப்பட்டு இராணுவத்தின் துணையுடன் சில தினங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டுள்ளதைத் தடுக்க முடியவில்லை.

வலிகாமத்தில் எமது மக்களின் காணிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இந்தநிலைமை கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தொடர்கின்றன.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அரச நிதியில் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பண ஒதுக்கீட்டில் ஒரு ஏக்கர் காணியில் பெரியளவிலான விகாரை ஒன்றை அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருவதாக அறியமுடிகின்றது. அங்கு பயிலும் சிங்கள மாணவர்கள் விகாரைக்குச் சென்று வழிபடுவதற்கு ஒரு விகாரை தேவை என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

ஆனால், அதற்காக ஒரு ஏக்கர் காணியில் பெரியளவில் ஒரு பௌத்த விகாரை அமைக்கும் அரசின் உள்நோக்கத்தை எமது பல்கலைக்கழக அதிகாரிகளும் பொதுமக்களும் புரிந்துகொள்ள வேண்டும். பௌத்த மாணவர்களின் வழிபாட்டுக்காகத்தான் விகாரை என்றால் அதனைச் சிறிய அளவில் நிர்மாணித்திருக்கலாம்.

அதேவேளை கிளிநொச்சியில் பௌத்த மாணவர்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்கனவே விகாரைகள் இருக்கின்றன. ஆகவே எமது அதிகாரிகள் இத்தகைய விடயங்களில் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும் என்று விநயமாக வேண்டிக்கொள்கின்றேன்.

அத்துடன், ஜனாதிபதியின் கவனக்குறைவு என்று கூறப்படும் ஏப்ரல் 21ஆம் திகதி குண்டு வெடிப்பு நிகழ்வுகளுக்கும் திடீரென்று மேற்கொள்ளப்படும் இந்த பௌத்த மயமாக்கல் நிகழ்வுகளுக்குமிடையில் சம்பந்தம் இருக்கின்றனவா என்று கேட்க வேண்டியுள்ளது. குண்டு வெடிப்பின் பின்னர் வட மாகாணத்தில் இராணுவத்தினரின் தேடுதல் முயற்சிகள் கடுமையாக இருந்தன.

பௌத்தமயமாக்கலுக்கு தமிழ் மக்கள் இடையூறு விளைவித்தால் தற்போதைய உயிர்த்த ஞாயிறின் பின்னைய காலகட்டத்தில் உடனே சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்ற ரீதியில் இவர்களுடைய திடீர் பௌத்தமயமாக்கல் நிகழ்வுகள் நடைபெறுகின்றனவோ நானறியேன்.

ஆகவே, எமது கண்முன்னே எமது உணர்வுகள், எதிர்ப்புக்கள் எதனையும் கண்டுகொள்ளாமல், பொருட்படுத்தாமல் நம் முன் நடைபெறும் இந்த அநீதிகளை நாம் இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. போருக்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் ஒரு திருப்புமுனையை அடைந்திருக்கிறது.

சகல தமிழ் கட்சிகளும் எமது இனத்தின் எதிர்கால இருப்பு பெரும் ஆபத்தில் இருக்கின்றது என்பதை உணர்ந்து தமக்கு இடையிலான காழ்ப்புணர்வுகள் அரசியல் போட்டிகளை மறந்து ஒன்றுபட்டு முழுமையான அரச எதிர்ப்பு அரசியலை மேற்கொள்ள ஆயத்தமாக வேண்டும். மிகவும் நரித்தனமாகவும் கபடத்தனமாகவும் எமக்கு எதிராக ஒரு பெரும் கட்டமைப்பு ரீதியானதும் கலாசார ரீதியானதுமான இனப்படுகொலையை இந்த அரசு முடுக்கிவிட்டுள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிமேலாவது ஏற்றுக்கொண்டு அரசுக்கு முண்டு கொடுக்கும் துரோகச் செயலை நிறுத்தவேண்டும். எமது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில கண்துடைப்பு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு அரசிடம் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக எமக்கு எதிரான இந்த 'இன அழிப்பு நடவடிக்கைகளை கண்டும் காணாததுபோல தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுவதை இனியாவது நிறுத்த வேண்டும்.

முழுமையான அரச எதிர்ப்பு அரசியலே எம் முன்னே இருக்கும் ஒரே வழி. தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் எமக்கு எதிரான இனப்படுகொலை செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய அடிப்படையில் நிரந்தரமான தீர்வு ஒன்றை கொண்டுவருவதற்கும் உபாயங்கள், வழி வகைகளை ஆய்தறிந்து மேற்கொள்ளவேண்டும்.

இன்று கன்னியாவில் மக்கள் பெரும் அளவில் ஒன்று சேர்ந்து நடத்தும் நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகின்றேன் – என்றுள்ளது. (ஐ–07)

## இன்னும் 5...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை நேசிக்கும் உண்மையான அரசை தெரிவு செய்வதற்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியின் கீழ் நுவரெலியா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட ஒரு தொகுதிக் கட்டடம் மக்கள் பாவனைக்கு நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையான அரசியல்வாதி என்பவர் மக்களின் பிரச்சினையை இனம் கண்டு அவற்றை நிவர்த்திக்க வேண்டும். உலக நாடுகளை போன்று ஏன் இலங்கையை மாற்ற முடியாது எனச் சிலர் கேட்கின்றனர். அவ்வாறு செய்ய முடியும். அதற்கு ஊழல் தடையாக உள்ளது அரச சேவையே அபிவிருத்தியின் பாரிய சக்தியாகும். நாட்டின் சனத்தொகையில் 8 பேருக்கு ஒரு அரச சேவையாளர் இருகிறார்.

ஆனால் அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியும். நாட்டின் வறுமையின் காரணமாகவே பல தொற்று நோய்கள் பரவுகின்றன. இலங்கையில் போதைப்பொருள் குற்றச்சாட்டு களுடன் தொடர்புடையோர் 15,000 பேர் சிறைச்சாலைகளில் உள்ளனர். அதே போல் போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களை புனர்வாழ்வுக்குட்படுத்த 11 புனர் வாழ்வு மையங்கள் உள்ளன. தற்போது அவை நிரம்பி வலிகின்றன.

அந்த மையங்களில் உள்ளவர்களை விரைவாக புனர்வாழ்வுக்குட்படுத்துமாறு அவர்களின் பெற்றோர் கேட்கின்றனர். ஆனால் அதனை செய்ய முடியவில்லை. எனவே ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களை புறந்தள்ளி செயற்பட முன்வரவேண்டும். அவ்வாறு செய்தால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் – என்றார்.

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்கள்தான் கல்வியில் முன்னிலை வகித்தன. ஆனால் இந்த நிலைமை சுனாமிக்குப்பின்னரும் அதன் பின்னர் ஏற்பட்ட நிலைமைகளாலும் வீழ்ந்துள்ளது. ஆகவே இந்த வீழ்ச்சியிலிருந்து மீண்டெழவேண்டியது மிக அவசியமானது. அதற்குரிய நடவடிக்கைகள் பலவற்றை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் முதன் முதலாக இராஜாங்கக் கல்வி அமைச்சரை யாழ்ப்பாணத்தில் நியமித்துள்ளேன். ஆகவே இங்குள்ளவர்கள் அவருடன் பேசி பல பிரச்சினைகளுக்கும் தீர்வைக் காணக் கூடியதாக இருக்கும். மேலும் பல்வேறு கல்வித் திட்டங்களை நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கின்றோம்.

குறிப்பாக அடுத்த ஐந்து வருடத்தில் தகவல் தொழில்நுட்பத்தை முன்னிறுத்திச் செயற்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அருகிலுள்ள உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம் இலங்கை முழுக்க நடைமுறைப் படுத்தப்படுகிறது. அதேபோல் எல்லா மாணவர்களுக்கும் சுகாதார நிலைமைகள் மேம்படுத்தப்படவேண்டும். என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வருகின்றன.

யாருமே பயிற்றப்படாத ஆசிரியர்களாக எதிர்க்காலத்தில் இருக்கக்கூடாது. ஆகவே எல்லாருமே பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருக்க வேண்டும் அல்லது பயிற்றப்பட வேண்டும். அத்தோடு தற்போது இருக்கும் கல்வித் திட்டத்துக்கு மேலாக 13 வருடக் கல்வித் திட்டத்தை உருவாக்கப் போகிறோம்.

அத்துடன் இணைய வசதிகளையும் 1ஏபீ பாடசாலைகளுக்கு கொண்டு வரவுள்ளதுடன் அது அடுத்த இரண்டு வருடத்தில் பல மடங்காகப் பாடசாலைகளில் விஸ்தரிக்கப்படும். குருநாகல் மாவட்டத்தில் முதற்கட்டமாகச் சிமாட் அதாவது நவீன பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

இந்த நாட்டைத் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்றும் இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் என்றும் சொல்வதுடன் நாங்கள் எல்லோரும் சிறிலங்கன் என்று சொல்வதில் பெருமையடைகிறோம். போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரேதேசத்தையும் இங்குள்ள மக்களையும் வளப்படுத்தி கட்டியெழுப்பவேண்டியது அவசியமானது. அதற்கமைய பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு புதிய செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். இவ்வாறு பல நடவடிக்கைகளை இந்த அரசு ஆரம்பித்திருக்கின்றது.

இதில் மிக முக்கியமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு சம்பந்தமான செயற்பாடகளுக்கு முடிந்தளவிற்கு முன்னுரிமை கொடுத்துள்ளோம். அதற்கமைய தீர்வைக் கண்டு பிடிப்பதற்காக தொடர்ச்சியாக பல்வேறு கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றோம். அது மட்டுமல்லாமல் அதற்கான எல்லா வேலைகளையும் நாங்கள் செய்து வருகின்றோம்.

ஆனால் துரதிஸ்டவசமாக அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மை இல்லை. ஆயினும் இனப்பிரச்சனைக்கு அதிகாரப் பகிர்வினூடாக தீர்வொன்றைக் காண வேண்டுமென்பதில் நானும் என்னுடைய கட்சியும் அக்கறையுடனும் விருப்பத்துடனுமே இருக்கின்றோம். இத்தகைய அதிகாரப் பகிர்வு சம்பந்தமாகவே தொடர்ந்தும் கலந்துரையாடிக் கொண்ட வருகின்றோம்.

இதனடிப்படையில் இந்த நாட்டிலிருக்கின்ற இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அதிகாரப் பகிர்வைக் கொடுப்பது தான் எங்களது நிலைப்பாடு. அவ்வாறாக அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இது சம்பந்தமாக நாங்கள் எல்லோரும் கலந்துரையாட வேண்டிய தேவையும் இருக்கின்றது.

இவ்வாறான நிலையிலும் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் பெரும்பாலான சிங்களவர்களும் ஏற்றுக் கொண்டு இணங்கிப் போகின்றனர். அவ்வாறு பெரும்பாலான சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு தீர்வு ஏற்பட வேண்டுமென்று தான் நாங்களும் விரும்புகின்றோம். நீங்களும் அதனைத் தான் விரும்புகின்றீர்கள். ஆகவே இது சம்பந்தமாக தொடர்ந்தும் கலந்துரையாடி முன்னேறுவோம்.

அடுத்த இரண்டு வருடத்திற்குள் இனப்பிரச்சனைக்கான தீர்வைக் காண வேண்டும். ஆகவே அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக நாம் கொண்ட படிப்பினைகளை கவனத்திற் கொண்டே செயற்பட வேண்டும். இதற்கமைய அடுத்த இரண்டு வருடத்திற்குள் நிச்சயமாக இனப்பிரச்சனைக்கு தீர்வை ஏற்படுத்துவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். ஆகவே நீண்டகாலமாக உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தி நாங்கள் எல்லோரும் இலங்கையன் எனப் பெருமையாகச் சொல்லுவோம். இலங்கையன் என்பதில் பெருமையடைவோம் என்றார். (ஐ–07)

## ஒக்ரோபர் 8 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்ளை அங்கத்தவர்களாகக் கொண்ட 29 குழுக்களின் ஊடாகத் எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுகிறது. தற்போது அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் இந்த மாத இறுதியில் அவை நிறைவடையும். அதனையடுத்து, அடுத்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் அவை பொதுமக்களின் விவாதத்துக்கு முன்வைக்கப்படவுள்ளது – என்றார். (ஐ)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடி பொருள்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் இரும்புத் துண்டுகளைச் சேகரிக்கச் சென்றவர், அங்கு காணப்பட்ட வெடிபொருளை எடுத்துவந்து அதனுள் காணப்பட்ட வெடிமருந்தை அகற்ற முற்பட்ட போது அது வெடித்துள்ளது. இதன்போது அவரது கையில் படுகாயம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# முஸ்லிம் திருமணச் சட்டத்தில் 11 திருத்தங்களுடன் பரிந்துரை!

கொழும்பு, ஜூலை 16

முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் திருமண சட்டத்தில், ஆண் மற்றும் பெண் திருமண வயதை 18 ஆக உயர்த்தும் திட்டமும் இதில் அடங்கும்.

திருமணப் பதிவில் பெண் கட்டாயமாகக் கையொப்பம் இட்டிருக்க வேண்டும் உட்பட 11 விடயங்கள் இந்த வரைவில் உள்ளடக்கப் பட்டுள்ளன. இந்த வரைவையும் உள்ளடக் கியதாக, முஸ்லிம் திருமணம் மற்றும் விவா கரத்துச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இந்த வரைவு இந்த வாரம் நீதி மற்றும் சிறை சீர்திருத்த அமைச்சர் தலதா அத்து கோரளவிடம் ஒப்படைக்கப்படும். ஒப்புதலுக்குப் பிறகு இது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. (ஐ)

# நுவரெலியாவில் அடையாள அட்டை அலுவலகம் திறப்பு

கொழும்பு, ஜூலை16

ஆட்பதிவுத்திணைக் களத்தின் இலத்திரனி யல்தேசிய அடையாள அட்டை அலுவலக மொன்று நுவரெலியா –ஹாவாஎலியபிரதேசத் தில் அமைக்கப்படவுள் ளது.

இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் பெருந்தோட் டத்துறை அமைச்சர் நவீன்திசாநாயக்கவால் நேற்று ஆரம்பித்து வைக்கப் பட்டன.

இந்த அலுவலகத் துக்காக உள்நாட்டலு வல்கள் அமைச்சால் 15கோடிரூபாநிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறான அலு வலகங்கள்நான்குகுரு நாகல், மட்டக்களப்பு, வவுனியா, காலி ஆகிய பிரதேசங்களில்அமைக் கப்பட்டுள்ளன. (ஐ)

# வெளிநாட்டவர்களுக்கு ஆயுதங்கள் விற்றனரா கடற்படை அதிகாரிகள்?

## உடனடி விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

இலங்கைக் கடற்படையின் ஆயுதங்கள் வெளிநாட்ட வர்களுக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டுள் ளன எனக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசா ரணை நடத்தப் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. அவன்ட் கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் கையளிக்கப்படுவதற்கு முன் னர், இலங்கைக் கடற்படையின் கீழ்நிலை அதிகாரிகள் சிலர், 800 ஆயுதங்களை 5000 டொலருக்கு வெளிநாட்ட வர்களுக்கு விற்பனை செய்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன என அவன்வரான் நிறுவனத்தின் தலைவரான மேஜர் நிசங்க சேனாதிபதி குற்றம்சாட்டி யிருந்தார்.

இலங்கைக் கடற்படையில் ஆயு தங்களைக்கையாளும்வணிகத்தில் ஈடுபட்டுள்ள கீழ் நிலை அதிகாரிகள் பலர், இந்த மோசடிகளில் ஈடுபட்டுள் ளனர்.

இந்த ஆயுதங்களுடன் வெளி நாட்டவர்கள் நுழைவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

இந்த ஆயுதங்கள் வெளிநாட்டு தீவிரவாத அமைப்புகளான ஐ.எஸ்., அல்கொற்தாவிடம் செல்லக் கூடும். என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்துபாதுகாப்புஇராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன கருத்து வெளியிடுகையில்,

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக, விசாரணைகளை நடத்துமாறு இலங் கைக் கடற்படைக்கு உத்தரவிடப்பட் டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கைக் கடற்படைத் தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதன் உண்மைத் தன்மை தொடர்பாக விசாரணைநடத்துமா றும் அறிவுறுத்தியுள் ளேன்.



எனினும், இத்த கைய குற்றச்சாட்டு கள் உண்மையாக இருப்பதற்கு சாத்தி யமில்லை.

கடற்படையினர் ஆயுதங்களை சட்ட விரோதமாக விற் பனை செய்திருப்பார் களா என்பது சந்தேக மாக உள்ளது.

அது உண்மை யாயின்அப்போதைய கடற்படைத்தளபதிஅதுபற்றிஅறிந்தி ருப்பார். விசாரணைகளில் எல்லாம் தெரிய வரும் – என்றார்.

அதேவேளை, இந்தக்குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கைக் கடற்படைத் தளபதி லெப்.கொமாண்டர் இசுறு சூரியபண்டாரவிடம் கேள்வி எழுப்பியபோது, நிசங்க சேனாதிபதி ஊடகங்களிடம் கூறியதற்குப் பதி லாக இந்தக் குற்றச்சாட்டுகளைச் சரியான அதிகாரிகளிடம் கொண்டு சென்றிருக்கவேண்டும். என்று தெரி வித்துள்ளார்.

எந்தக் குற்றச்சாட்டுகள் இருந் தாலும், சரியான அமைப்பிடம் அதனைபதிவுசெய்திருக்கவேண்டும். பொலிஸாரிடம், ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட் டுகளை விசாரிக்கும் ஆணைக் குழு வில், அல்லது பாதுகாப்பு அமைச் சில் அவர் முறைப்பாடு செய்திருக் கலாம். அவர் இதனை ஊடகங்க ளிடம் தான் கூறியிருக்கிறார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத் தலானது என்று கூறுகின்ற அவர், இந்த இரகசியத்தை ஏன் அவர் இவ்வளவுகாலமும்மறைத்துவைத்தி ருந்தார்? உடனடியாகவே ஏன் அதனை அவர் வெளிப்படுத்த வில்லை? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

# ஸ்கந்தாவில் கலையரங்குக்கு நேற்று அடிக்கல் நட்டார் ரணில்!











யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரம சிங்க சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல் லூரியின் கலையரங்கத்துக்கு நேற்று அடிக்கல் நட்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பிரதமர், கட்சி உறுப்பினர்கள் உட்பட பலதரப்பினர் களையும் சந்தித்துக் கலந்துரையாடி யிருந்தார். இதனைத் தொடர்ந்து நேற்றுச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி யின் 125 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டார்.

இதன்போது அந்தப் பாடசாலையில் 55 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத் துக்கு அடிக்கல்லையும் நட்டு வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலையின் 125 ஆவது ஆண்டு விழா பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான த.சித்தார்த் தன், மாவை சேனாதிராசா, ஈ. சரவணப வன், கல்வி அதிகாரிகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 07)

# உயிலங்குளத்தில் நோய்த் தாக்கத்தால் ஏராளமான கால்நடைகள் உயிரிழப்பு!

## உடன் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மன்னார், ஜூலை 16

மன்னார் – உயிலங்குளம் பகுதி யில் கடந்த ஆறு மாத காலமாக இனம் காணப்படாத நோயின் தாக்கம் காரண மாக ஏராளமான கால்நடைகள் உயிரிழந்துள்ளன எனவும், இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன எனவும் உயிலங்குளம் நல்லாயன் கால்நடை உரிமையாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக உயிலங்குளம் நல்லாயன் கால்நடை உரிமையாளர் ஒன்றிய உறுப்பினர்கள் கையொப்பமிட்டு நேற்று மன்னார் பிரதேச செயலாளருக்கு அவசரக் கடி தம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில், உயிலங்குளம் பகுதியில் கடந்த ஆறு மாத காலமாக இனம் காணப்படாத நோயின் காரண மாக ஏராளமான கால் நடைகள் உயி ரிழந்துள்ளன. முன்னைய காலங்க ளில் எமது மாவட்டத்தில் இறைச்சி, பால், மாட்டெரு போன்ற தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள எமது கால்நடை வளர்ப்பாளர்கள் முக்கிய பங்கு வகித் துள்ளனர் என்பதை யாவரும் அறி வோம்.

அதிகமான குடும்பங்கள் கால் நடையை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களாக உள்ளன. கால்நடை களின் இழப்பு குடும்பங்களிலே பெரும் துயரத்தையும் கஷ்டத்தையும் ஏற் படுத்தியுள்ளது. கஷ்டத்தின் காரண மாகச் சில பிள்ளைகள் பாடசாலைக்குக் கூடச் செல்வதில்லை. காரணம் அன் றாடம்கிடைக்கின்றபாலை விற்றுத்தான் வாழ்க்கை நடத்துகின்றனர்.

கால்நடைகள் உயிரிழக்கின்றமை தொடர்பாக மிருக வைத்தியரை சந் தித்து மருத்துவ உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டபோதும் இன்று வரை பல கால்நடைகள் உயிரிழந்து கொண்டு இருக்கின்றன. சில கால்நடை உரிமையாளர்களுக்கு நூற்றுக்கணக் கான கால்நடைகள் உயிரிழந்துள் ளன.

பாதிக்கப்பட்ட கால்நடை உரிமை யாளர்களுக்கு இதுவரை எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாமையினால் அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதி யாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் கால் நடைகளை வெறுக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே எமது கால்நடை உரிமை யாளர்களுக்கு மதிப்பளித்து தமது அதி கார பிரதேசத்திற்கு உற்பட்ட கால்நடை உரிமையாளர்களாகிய எங்களது அவல நிலையைக் கருத்தில் கொண்டு அவலத்தில் இருந்து நாங்கள் மீள தங்களது மேலான அதிகாரத்தை பயன்படுத்தி தேவையான நஷ்டஈட் டைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், கால்நடைகளை நோயில் இருந்து காப் பாற்றுவதற்கும் தகுந்த நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் – என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2019 இல் வெளியிடப்பெற்றது.